ஸ்ரீ

லோகரஞ்சனி.

இந்து ஸ்திரீபுருஷர்கள் ஞானாபிவிருத்தியின் பொருட்டு பிரசுரமாகும்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தம் - க0.] துர்முகிஹு சித்திரைமீ. [எண் - ச.

வேதாகமப்பிரகரணம்.

யஜுர்வேத சம்பந்தமான

கலிஸந்தாரணோபநிடதம்.

సహనావవత్విశాంతిః.

ద్వాపరాంతే నారదో బ్రహ్మాణం జగామ కథం
భగవన్ గాం పర్యటన్ కలిం సంతరేయమితి
సహోవాచ బ్రహ్మా సాధు పృష్టోస్మి సర్వశ్రుతి రహస్యం
గోప్యం తచ్ఛృణుయేన కలిసంసారం తరిష్యసి।

துவாபரயுக முடிவில் ஸ்ரீநாரதமகாமுனிவர் சதுர்முகப்பிரம்மாவின் பக்கலேகி, பகவானே! உலகத்தில் நான் எப்படி சஞ்சரித்துக் கலிபுருஷனை வெல்லுவேன் என்றனர். அதற்குப் பிரம்மாவானவர் சொல்லுகிறார். என்னை நன்றாய்க் கேட்டீர். அது சகலவேதங்களின் இரகசியமாயும், கோப்பியமாயுமுள்ளது. அதைக்கேட்பதினாலே கலியாகிய சமுசாரத்தைத் தாண்டுவீர்.

భగవత ఆదిపురుషస్య నారాయణస్య నామోచ్చారణ
మాత్రేణ నిర్ధూతకలిర్భవతి।

నారదః పునః ప్రపచ్ఛ తం నామ కిమితి స హోవాచ హిరణ్యగర్భః।

பகவானும், ஆதிபுருஷனுமான ஸ்ரீமந்நாராயணனுடைய நாமத்தைச் செபிப்பதினாலே கலிதோஷத்தினா லுண்டானவற்றை நீக்கிக்கொள்ளுவீர் என்றார். மீண்டும் ஸ்ரீநாரதமகாரிஷி அந்த நாம மெதுவெனக்கேட்க, இரண்ணிய கருப்பராகிய பிரம்மாவானவர்சொல்லுகின்றார்.

హరే-రామ-హరే-రామ-రామ-రామ-హరే-హరే।
హరే-కృష్ణ-హరే-కృష్ణ-కృష్ణ-కృష్ణ-హరే-హరే।
ఇతి షోడశకం నామ్నాం కలికల్మష నాశనం।
నాతః పరతరోపాయ స్సర్వ వేదేషు దృశ్యతే ఇతి।

ஹரே-ராம-ஹரே-ராம-ராம-ராம-ஹரே-ஹரே
ஹரே-கிருஷ்ண-ஹரே-கிருஷ்ண-கிருஷ்ண-கிருஷ்ண-ஹரே-ஹரே.

இந்தப் பதினாறு நாமங்கள் கலியினால் வரும் தோஷத்தை நாசப்படுத்தும். இதைவிட மேலான உபாயம் சருவ வேதங்களிலும் தோன்றவில்லை.

షోడశకలా వృతస్య జీవస్యావరణ వినాశనం।
తతః ప్రకాశతే పరబ్రహ్మ మేఘాపాయే రవిరశ్మి మండలీవేతి।
పునర్నారద ప్రపచ్ఛ భగవన్కోస్య విధిరితి తం హోవాచ।
నాస్య విధిరితి సర్వదా శుచిరశుచిర్వా పఠన్
బ్రహ్మణ స్సలోకతాం సమీపతాం సరూపతాం సాయుజ్యతామేతి।

இந்த நாமங்கள், பதினாறுகலைகளால் மறைவுபட்ட ஜீவனுடைய அஞ்ஞானமாகிய ஆவரணத்தை நாசப்படுத்தும். பின்னர் மேகங்கள் விலகிய சூரியவிகாசமண்டலம்போல, பரப்பிரம்மம் பிரகாசிக்கும் என; பின்னும் ஸ்ரீநாரதமுனிவர், பகவானே! இந்த நாமபஜனைக்கு விதி யென்னவென்று கேட்க, பிரம்மதேவர் இதற்கு விதியேயில்லை, அந்த நாமத்தை சுத்தமாயிருப்பினும், அசுத்தமா யிருப்பினும் எப்போதும் உச்சரித்துப் படிக்கிறவன் பிரம்மத்தின் லோகத்தையும், சமீபத்தையும், ரூபத்தையும், அவரிடம் கூடியிருப்பதையும் அடைகிறான் என்றார்.

యదాస్య షోడశకస్య సార్ధత్రికోటిర్జపతి
తదా బ్రహ్మహత్యాం తరతి స్వర్ణస్తేయాత్పూతో భవతి
వృషలీగమనాత్పూతో భవతి
పితృదేవ మనుష్యాణా మపకారాత్పూతో భవతి
సర్వధర్మ పరిత్యాగపాపాత్సద్యశ్శుచితా మాప్నుయాత్ ॥
సద్యోముచ్యతే సద్యోముచ్యత ఇత్యుపనిషత్ ॥

இந்தப்பதினாறு நாமங்களை மந்திரமாகவெண்ணி மூன்றரைக்கோடி தரம் ஜபிக்கிறவன், பிரம்மகத்தியைப் போக்கிக்கொள்ளுகிறான்; பொன்திருடின குற்றத்திலிருந்து விடுபடுகிறான்; கெட்டபெண்கள் சம்பந்ததோஷத்தை நீக்கிக்கொள்ளுகிறான்; பிதுர்க்கள், தேவதைகள், மனிதர்கள் முதலானவர்களுக்குச் செய்த அபகாரத்திலிருந்து பரிசுத்தனாகிறான். சகல கர்மதருமங்களையும் விடப்பட்ட பாபங்களிலிருந்து பரிசுத்தத்தை யடைகிறான். உடனே கலியிலிருந்து விடுபடுகிறான், உடனே கலியிலிருந்து விடுபடுகிறான் என்று உபநிஷத்து.

ஓம் ஸஹநாவவத்விதி ஶாந்திஃ.

ஸ்ரீபாஞ்சராத்திரம்.

ஸ்ரீபாஞ்சராத்திரம் என்பது வைஷ்ணவாகமம். இது ஓர் காலத்தில் பிரம்மாவுக்கு விஷ்ணுவால் அருளப்பட்டது. வேதத்தைக்காட்டிலும் முக்திமார்க்கத்தை இச்சாஸ்திரம் சுலபமாகக் காட்டும். இதை வைஷ்ணவர்கள் விசேஷ தர்மமாகக்கொண்டு அவ்வழியில் நடப்பார்கள். இப்பகவச்சாஸ்திர மகிமைகளைப் பூர்வாரியர்கள் ஆகமப்பிரமாணம், பாஞ்சராத்திரரக்ஷை முதலிய கிரந்தங்களால் நன்கு விளக்கி யிருக்கிறார்கள். ஆகலால், இங்ஙனஞ் சிறிது விளக்குவோமாக.

ఋగాది సంజ్ఞకో వేద శ్చతుర్ధా భిద్యతే యథా ।
తద్వ త్సిద్ధాంత భేదేన పంచరాత్రం చతుర్విధమ్ ॥

இருக்கு முதலிய பேதத்தாலே வேதமானது நான்கா யிருக்கிறதுபோல, ஸ்ரீபாஞ்சராத்திரமும், மந்திரம், ஆகமம், தந்திரம், தந்திராந்திரம் என்று சித்தாந்த பேதத்தாலே நான்குவகைப்பட்டிருக்கும்.

ఋగాదయో యథైకైకం భిద్యతే బహుశాఖయా ।
తథా సిద్ధాంతమేకైకం వక్తృభేదేన భిద్యతే ॥

இருக்கு முதலிய நான்கு வேதங்கள் அநேக சாகையா யிருப்பதுபோல, சித்தாந்தங்கள் நாலும், அதனதன் கர்த்தாக்கள் பேதத்தாலே அநேகமா யிருக்கும்.

ఏకమూర్తి ప్రధానం తన్మంత్ర సిద్ధాంత ముచ్యతే ।
చతుర్మూర్తి ప్రధానంచ యత్తదాగమ పూర్వకమ్ ॥
సిద్ధాంత ముచ్యతే సద్భిర్ద్వితీయం లోకవిశ్రుతమ్ ।
నవమూర్తి ప్రధానంచ తంత్రసిద్ధాంత ముచ్యతే ॥

చతుర్వక్త్రై స్త్రివక్త్రైర్వా దేవే యత్రార్చనా విధిః ।
తత్తంత్రా న్తరమిష్టం స్యాత్సర్వే సర్వఫలప్రదాః ॥

ஏகமூர்த்தி பிரதானமான பிரதிஷ்டாதிகளை விதிப்பது மந்திரசித்தாந்தமென்றும், சதுர்மூர்த்தி பிரதானமானது ஆகமசித்தாந்தமென்றும், நவமூர்த்தி பிரதானமானது தந்திர சித்தாந்தமென்றும், நாநாமூர்த்தி பிரதானமானது தந்திராந்திர சித்தாந்தமென்றும், இப்படி மூர்த்திபேத முண்டா யிருந்தாலும் சகல சித்தாந்தங்களும் பலன்கொடுக்கத் தகுந்தவைகளேயாம்.

సిద్ధాంతనామచాన్వర్థం నిరాహురితి పండితాః ।
మీమాంసాదిషు శాస్త్రేషు యేసిద్ధార్థమనీషిణః ॥
తేషాం మంతేధికారోస్మిఞ్ఛాస్త్రే నైవాన్యథాగతిః ।

ஸ்ரீபாஞ்சராத்திரத்திற்கு சித்தாந்தமென்னும் பெயரானது எதார்த்த நாமமா யிருக்கும். நான்குவேதங்களையு மோதி பூர்வோத்தரமீமாம்சார்த்தங்களையெல்லாம் கையிலங்கு நெல்லிக்கனியாகக் கைவந்திருக்குமவர்கள் சித்தர்களாவார்கள். இவர்களுக்கு அர்தமாகையாலே இதனைச் சித்தாந்தமென்கிறது. இதனாலிவர்கள் ஆசாரியபத நிர்வாஹகரென்பதாம். ஸ்ரீபாஞ்சராத்திராதிகாரிகளுக்கொழிய, சித்தர்களுக்கெல்லாம் அந்தமாயிருக்கையாகிற விப்பதத்தில் கதியுண்டாகமாட்டாது என்பதாம்.

సురాసురైర్నుతో నిత్యం హరిర్నారాయణః ప్రభుః ।
యస్యనాభ్యుద్భవో బ్రహ్మా విశ్వస్యజగతః ప్రభుః ।
పురాణైశ్చైవవేదైశ్చ పంచరాత్రైస్తథైవచ ।
ధ్యాయంతియోగినోనిత్యం స్తుతిభిశ్చయజంతితం ।

எந்த ஹரியாகிய நாராயணனை தேவர்களும், அசுரர்களும் எக்காலமும் துதிசெய்துகொண்டிருக்கிறார்களோ, எந்த ஹரியினுடைய நாபிக்கமலத்தில் உலகசிருஷ்டி கர்த்தாவாகிய பிரம்மதேவர் உற்பத்தியானாரோ, அந்த பிரபுவை புராணங்களாலும், வேதங்களாலும் பாஞ்சராத்திரத்தினாலும் யோகிகள் நித்தியம் தியானித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்று ஸ்ரீராமாயணம் உத்தரகாண்டம் கூறுகின்றது.—(வரும்.)

ஸ்மிருதிஸாரப்பிரகரணம்.

சாதிகளின் பிரிவு.

(ங.சூ-ம் பக்கத் தொடர்.)

இந்தியாவில் ஆதியிலேயே பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர சங்கர சாதிகளின் பிரிவுகளும், அவரவர்களுக்குரிய ஆசாரவநுஷ்டானங்களும் உண்டாயிருந்தன. இவற்றிற்கு உற்பத்திஸ்தானம், உலகத்திற்குப்பூங்காவனம்போலுள்ளதும், தேவர்களாலும் ரிஷிகளாலும்கொண்டாடப்பட்டதுமான கிழக்கு, மேற்கு சமுத்திரங்களும், இமய விந்திய பர்வதங்களும் எல்லையாகவுடைய ஆரியாவர்த்ததேசமே. இவ்வாரியவர்த்தம் ஞானிகள் சேரத்தகுந்தவிட மென்பதாம். ஆனாலும் ஆரியர்கள் இமயமலை, சிந்துநதி, இந்திய சமுத்திரம், வங்காளக்குடாக்கடல், பிரம்மதேசம் இவைகளை எல்லைகளாகவுடைய இந்துதேசமுழுதும் வாசஞ்செய்துகொண்டிருந்தார்களென்பது திண்ணம். இவற்றிற் காதாரமான விஷயங்கள் இதிகாசபுராணங்களால் நன்குவிளங்கும். இப்படி யிருக்க, தற்காலத்திற் சிலர், ஆரியரென்போர் தென்னிந்தியாவிலில்லையென்றும், இத்திக்கில் ஆரியர்கள் குடியேறினர்களென்றும், ஆரியர்க்குப் பூர்வம் பஞ்சமர், பள்ளர், பறையர், மறவர்களே பூர்வகுடிகளென்றும், அவர்கள்காலத்தில் ஆரியர்களாகியபிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களில்லையென்றும், திராவிட ரென்னும் பெயர் அக்கீழ் வகுப்பாருக்கேயுரியதென்றுங் கொண்டாடுவது துரபிமானமே காரணமாயிருக்கின்றதேயன்றி பிறிதில்லை. இதுநிற்க, மநு ஸ்மிருதி முதலிய தர்மசாஸ்திரங்களின் தாற்பரியங்களை பூர்வோத்தர விருத்தமின்றி யாராய்ந்து பார்க்கிற விவேகிகள் யாதொரு தோஷமுங் கூறுர்கள். அவிவேகிகளாகிய உயர் வகுப்பாரும், தாழ்வகுப்பாருமே ஒருவருக்கொருவர் தோஷாரோபணஞ்செய்து நிரயத்துக்கு ஆளாகின்றுர்கள். தென்னிந்தியாவில் கீழ்வகுப்பாரே பூர்வ குடிகளென்ருல், அப்பூர்வகாலத்தில் பிராமணர் முதலிய ஆரியவகுப்பார்கள் இல்லையென்றும்; ஆரியவர்த்தத்தில் ஆரியவகுப்பாரே யிருந்தாரென்ருல், அத்தேசத்தில், பஞ்சமர்முதலிய கீழ்வகுப்பார் இல்லையென்றும் ஏற்படவேண்டியது அவசியமல்லவா? அப்படி யில்லையே. எத்தேசத்திலும் ஆதிமுதற் பிராமண பஞ்சமசாதியர் நிறைந்தே யிருக்கின்றுர்கள். தென்னிந்தியர் திராவிடம் என்னும் பாஷையின் காரண முன்னிட்டு ஆரியரல்ல வென்று சிலர் சொல்லுகின்றுர்கள். உலகத்தில் பாஷை சாதிப் பிரிவுகளுக்குக் காரணமாகாது. இந்தியாவில் எத்தனையோ பாஷைக்காரர்க ளிருக்கின்றுர்கள். ஒவ்வொரு பாஷைக்காரருள்ளும் பிராமணுதி ஆரியசாதிகள் உண்டாயிருக்கின்றன. இவ்விஷயம் விசாலமானதால் சமயம் நேர்ந்தபோது விளக்குவானுன்னி, இங்ஙனம்விட்டு கீழ்வகுப்பார் தூஷிக்கும் ஸ்மிருதிகளாகிய சாஸ்திரங்களில் அவர்களபிப்பிராயம்போல் இருக்கின்றதா வென்று ஆராய்வோமாக.

மநுஸ்மிருதி.

అధ్యాపనం చాధ్యయనం యజనం యాజనం తథా
దానం ప్రతిగ్రహం చైవ బ్రాహ్మణానామకల్పయత్ ॥

பிராமணர்களுக்கு வேதம் ஓதுவித்தல் ஓதுதல், யாகஞ்செய்தல் செய்வித்தல், தானமீதல் பெற்றுக்கொள்ளுதல் என்பன அறுவித கருமங்களாம்.

ప్రజానాం రక్షణం దాన మిజ్యాధ్యయనమేవచ ।
విషయేష్వ ప్రసక్తిశ్చ క్షత్రియస్య సమాసతః ॥

அரசனுக்கு பிரஜைகளை நீதியுடன் காப்பாற்றுதல், தானமீதல், யாகஞ்செய்தல், வேதமோதல், பாடல், ஆடல், ஸ்திரீ முதலிய விஷயாநுபவங்களில் மனதில்லாமலிருத்தலாம்.

పశూనాం రక్షణం దాన మిజ్యాధ్యయన మేవచ ।
వణిక్పథం కుసీదంచ వైశ్యస్య కృషిమేవచ ॥

வைசியனுக்கு பசுக்களைக்காத்தல், தானமீதல், யாகஞ்செய்தல், வேதாத்தியயனம்புரிதல், வியாபாரம்செய்தல், வட்டிவாங்கல், பயிரிடுதல், இவ்வாறும் விதித்திருக்கிறது.

ఏత మేవతు శూద్రస్య ప్రభుః కర్మ సమాదిశత్ ।
ఏతేషామేవ వర్ణానాం శుశ్రూషా మనసూయయా ॥

சூத்திரனுக்கு, மேலைப மூன்று சாதிகளுக்கும் ஊழியஞ்செய்தலை முக்கிய தர்மமாக பிரபுவான பிரம்மா ஏற்படுத்தினர்.

ఊర్ధ్వం నాభేర్మేధ్యతరః పురుషః పరికీర్తితః ।
తస్మాన్మేధ్యతమంత్వస్య ముఖముక్తం స్వయంభువా ॥

புருஷனுடைய தேகமே பரிசுத்தம், அதிலும் நாபிக்கு மேற்பாகம் பரிசுத்தம், அதற்கு மேலும் முகம் பரிசுத்த மென்று சுயம்புவாகிய பிரம்மதேவனுல் சொல்லப்பட்டது.

ఆచారాద్విచ్యుతో విప్రో నవేదఫలమశ్నుతే ।
ఆచారేణతు సంయుక్తస్సంపూర్ణ ఫలభాగ్భవేత్ ॥

ஆசாரத்தைவிட்ட பிராம்மணனுக்கு வேதத்திற்கூறிய பலன்களை யடைவதில்லை. ஆசாரத்தையுடைய பிராம்மணனுக்கே எல்லாப்பலன்களும் கிடைக்கும்.

బ్రాహ్మణః క్షత్రియో వైశ్యస్త్రయో వర్ణా ద్విజాతయః ।
చతుర్థ ఏకజాతిస్తు శూద్రో నాస్తి తు పంచమః ॥

நான்குசாதிகளிலே, பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் என்னும் மூவரும் பூணனூல் தரிப்பதினல் புநர்ஜன்மத்தை யடைந்து துவிசாதியரென்று சொல்லப்படுகிருர்கள். சூத்திரனுக்கு பூணனூல் தரியாததினல் ஒரேசாதியாகிருன். இந்த நான்குசாதி தவிர ஐந்தாஞ்சாதியில்லவே யில்லை.

సర్వవర్ణేషు తుల్యాసు పత్నీష్వక్షతయోనిషు ।
ఆనులోమ్యేన సంభూతా జాత్యా జ్ఞేయాస్త ఏవ తే ॥

நான்கு சாதியினிடத்திலும் தந்தம் சாதியைச் சேர்ந்தவர்களாகவும், விபசார தோஷமில்லாதவர்களாகவு முள்ள மனைவிகளை விவாகஞ்செய்த கணவருக்குப் பிறக்கும் புத்திரர்களே அந்தந்த சாதியாராக ஏற்படுகின்ருர்கள்.

அநுலோம சாதிகள்.

స్త్రీష్వనంతరజాతాసు ద్విజైరుత్పాదితాన్సుతాన్ ।
సదృశానేవ తానాహుర్మాతృదోషవిగర్హితాన్ ॥

பிராம்மண க்ஷத்திரிய வைசிய ரென்னும் துவிசாதிகளால் தந்தஞ் சாதிக்கடுத்த இரண்டாவது சாதி ஸ்திரீகளிடத்திற் சேர்ந்து பிறப்பிக்கும் புத்திரர்கள் தாயினுடைய சாதிக்கு உயர்ந்தவர்களாகவும், தந்தையின் சாதியைப் பொருந்தாதவர்களாகவும், தந்தைக்குச் சமமுடையவர்களாகவும் சொல்லப்படுகின்றவர்களாயிருக்கின்ருர்கள்.

బ్రాహ్మణాద్వైశ్యకన్యాయామంబష్ఠో నామ జాయతే ।
నిషాదః శూద్రకన్యాయాం యః పారశవ ఉచ్యతే ॥

பிராமணன் விவாகஞ் செய்துகொண்ட வைசிய மனைவியிடத்திற் பிறந்தவன் அம்பஷ்டனென்றும், அப்படி சூத்திரமனைவியிடத்திற் பிறந்தவன் நிஷாதன் அல்லது பாரசவன் என்றும் சொல்லப்படுகிருன்.

క్షత్రియాచ్ఛూద్రకన్యాయాం క్రూరాచారవిహారవాన్ ।
క్షత్రశూద్రవపుర్జంతురుగ్రో నామ ప్రజాయతే ॥

க்ஷத்திரியனல் விவாகம் செய்துகொண்ட சூத்திரமனைவியிடத்தில் பிறந்தவன் குரூரசேஷ்டையுடையவனும், க்ஷத்திரிய சூத்திரர்களுடைய நடத்தையுடையவனுமுள்ள உக்கிரன் என்பவனும்.

విప్రస్య త్రిషు వర్ణేషు నృపతేర్వర్ణయోర్ద్వయోః ।
వైశ్యస్య వర్ణే చైకస్మిన్ షడేతేఽపసదాః స్మృతాః ॥

பிராமணனுக்கு, தனக்குக்குறைந்த மூன்று சாதிகளிடத்திலும், க்ஷத்திரியனுக்கு, தனக்குக் குறைந்த இரண்டுசாதிகளிடத்திலும், வைசியனுக்கு, தனக்குக் குறைந்த ஓர் சாதியினிடத்திலும் பிறக்கிறவர்களா யிருக்கின்ற அறுவரும், சுசாதி மனைவிகளிடத்திற் பிறக்கிறவர்களைக்காட்டிலும் நிக்ருஷ்டரன்றி, அபசதர் என்கிற நீசர்களாகச் சொல்லப்படுகின்ருர்கள்.

பிரதிலோம சாதிகள்.

క్షత్రియాద్విప్రకన్యాయాం సూతో భవతి జాతితః ।
వైశ్యాన్మాగధవైదేహౌ రాజవిప్రాంగనాసుతౌ ॥

க்ஷத்திரியனுக்கு பிராம்மண ஸ்திரீயினிடத்தில் பிறந்தவன் சூதனென்றும், வைசியனுக்கு க்ஷத்திரிய ஸ்திரீயினிடத்திற் பிறந்தவன் மாகதனென்றும், அவ்வைசியனுக்கே பிராம்மண ஸ்திரீயினிடத்திற் பிறந்தவன் வைதேகனென்றுஞ் சொல்லப்படுகிருர்கள்.

శూద్రాదాయోగవః క్షత్తా చండాలశ్చాధమో నృణామ్ ।
వైశ్యరాజన్యవిప్రాసు జాయంతే వర్ణసంకరాః ॥

சூத்திரனுக்கு வைசியக்ஷத்திரிய பிராம்மண ஸ்திரீகளிடத்திற் பிறந்தவர்கள், ஆயோகவர், க்ஷத்தர், சண்டாளர் என்று முறையே சொல்லப்படுகிருர்கள்.

ఏకాంతరే త్వానులోమ్యాదంబష్ఠోగ్రౌ యథా స్మృతౌ ।
క్షత్తృవైదేహకౌ తద్వత్ప్రాతిలోమ్యేఽపి జన్మని ॥

அநுலோமசாதியிடத்தில் பிராம்மணனுக்கு வைசியமனைவி யிடத்திற் பிறந்த அம்பஷ்டன், க்ஷத்திரியனுக்கு சூத்திரமனைவி யிடத்திற் பிறந்த உக்கிரன், இவர்களைப்போல பிரதிலோம சாதியிடத்தில் க்ஷத்த வைதேகர் இவர்களைத் தீண்டுவதற்கு யோக்கியர்களென்று சொல்லப்படுகின்ருர்கள்.

పుత్రా యేఽనంతరస్త్రీజాః క్రమేణోక్తా ద్విజన్మనామ్ ।
తాననంతరనామ్నస్తు మాతృదోషాత్ప్రచక్షతే ॥

துவிசாதிகளுக்கு தாழ்ந்த சாதிகளிடத்தில், அநுலோமமாகப் பிறந்த குழந்தைகள் தாயினுடைய சாதியை யடைகின்ருர்கள்; ஆகையால், தாயினுடைய சாதிக்கு விதித்த சமஸ்காரங்களைச்செய்யத் தகுந்தவர்களென்று சொல்லப்படுகின்ருர்கள்.

(வரும்.)

இதிகாசபுராணப்பிரகரணம்.

புராணங் கற்பனைக் கதையா?

"புராணஃ கல்பநாகதா" என்று ஓர் மொக்கை வாக்கியத்தினால், சைவவைஷ்ணவ சாக்தேய கணாதிப மதத்தினர்கள் தங்கடங்கள் தெய்வத்தைப் பெருமைப்படுத்தக் கற்பித்து வைத்திருக்கின்றன புராணங்கள் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆகையால் புராணங் கற்பனையாவென்பதைப்பற்றி யோசிப்போம்.

ஆத்துமாக்கள் ஞானதசைக்குத்தக்கபடி கிரிக்கச் சுருதி ஸ்மிருதி இதிகாச புராணாதிகள் ஆதியிலுண்டாயின வென்பதே சித்தாந்தம். இவற்றிற் சுருதியே பிரமாண மென்று சிலரும், சுருதி ஸ்மிருதிகளும் பிரமாணமென்றுசிலரும், சுருதி ஸ்மிருதேதிகாசங்களும் பிரமாணமென்று சிலரும், சுருதி ஸ்மிருதேதிகாஸ புராணங்களும் பிரமாணமென்று சிலரும் கூறுவார்கள். சுருதியானது விசேடப்பிரமாண மென்று எல்லாரும் ஒப்புக்கொள்வதுண்டு. சுருதியை யநுசரித்தே ஸ்மிருதேதிகாஸ புராணங்கள் விளங்கியிருக்கின்றன. ஆகையால், "శ్రుతిస్మృత్యోర్విరో ధేపి శ్రుతిరేవ బలీయసీ" என்கிறபடி, சுருதிக்கு விரோதமாக ஸ்மிருதிகூறினும் சுருதியே பலிஷ்ட பிரமாணமாகும்.

ஆகவே, ஸ்மிருதியை ப்லிஷ்ட பிரமாணமென்பார் கருத்தும் பிரயோஜன மன்றென்றுணர்க. இவ்வண்ணமே இதிகாச புராணக் கருத்துகளும் சுருதி விரோதமாக விருப்பின் அவைகள் கொள்ளத்தக்க தன்று. சிலர் சுருதி சித்தாந்தமாகிய உபநிஷத்துக்களும் புராணங்கள்போலவே கற்பனையென்று முரண்படக் கூறுகின்றார்கள். இவ்வளவும் அவர்கள் கூறிக்களிப்பது, சுருதியே முக்கியப்பிரமாணமென்று சித்தாந்தப்படுத்தும் பொருட்டேயாம். சுருதியினருத்தத்தை நேரேவிளக்க முடியாதென்று சுருதியே உபநிஷத் ஸ்மிருதேதிகாச புராணங்கள் ஆன்மாக்களுக்காகப் பிரம்மாவினாலும் மகாத்துமாக்களாகிய ருஷிகளாலும் அருளப்பட்டதென்றும், அவையும் ஒவ்வொரு கற்பங்களிலொன்றொன்று பிரகாசிக்கச்செய்யப்பட்டனவென்றும் முன்னமே விளக்கி யிருக்கின்றோமாகலின், ஈண்டு கூறுவது வியர்த்தமாகும்.

சிலர் புராணங்கள் கற்பனையென்று சொல்லினும் அவர்களால் நீக்கப்படாத சுருதிகளிலும், உபநிஷத்துக்களிலும் ஒன்றான—

பிரகதாரண்ணிய கோபநிஷத்தில்,

స యథార్ద్రైధాగ్నేరభ్యాహితాత్పృథగ్ధూమావి
నిశ్చరంత్యేవం వా అరేఽస్యమహతోభూతస్య నిశ్వసిత
మేతద్య దృగ్వేదో యజుర్వేద స్సామవేదో ఽథర్వాం
గిరస ఇతిహాసః పురాణంవిద్యా ఉపనిషదశ్లోకాః
సూత్రాణ్యను వ్యాఖ్యాని వ్యాఖ్యానాన్యస్యైవై
తాని సర్వాణి నిశ్వసితాని ॥

என்பதில், நெருப்பி லிருந்து புகையெழும்புவதுபோல், ருக்கு, யஜுர், சாமம், அதர்வண வேதங்கள், இதிகாசம், புராணம், வித்தை, உபநிஷத்துக்கள், சுலோகங்கள், சூத்திரங்கள், அநுவியாக்கியானங்கள் ஆகிய இவைகள் பிரம்மத்தினுடைய மூச்சுக் காற்றுக்கள் என்று விளக்கியிருக்கின்றமையால், அவற்றிலொன்றான புராணங் கற்பனையெனக் கூறுவது அவிவேகமாம்.

"புராணஃ கல்பநாகதா" என்று கூறுவதேனென்று ஒருகேள்விபிறக்கும். இது புராணங்களிற் கூறும் வர்ணனையே கற்பனை யென்று சொல்லக் கூடுமே யல்லாமல், இல்லாத முயற்கொம்பை உள்ளதெனக் கற்பிப்பதுபோலல்ல வென்பதாம்.

ஆனால், சிலபோலி மதாபிமானிகள் வேதாந்தக்கருத்துகளை யறியாமல், புராணங்களில் சில கற்பனா சுலோகங்களை நவீனமாக நுழைத்திருப்பதுமுண்டு. அவற்றை யாராய்ந்து திரஸ்கரிப்பதே பண்டிதாள் செய்கையே யல்லாமல், ஆதியிலேயே யுண்டாயிருக்கிற புராணத்தை முழுதுங் கற்பனையென்பது அறியாமையேயாம்.

வேதத்தின் வீறுபாட்டை யறிவது மகாஞானிகளுக்கே யல்லாமல், மந்தமதியுடையவர்களாலறிவது கூடாமையால், "ఇతిహాస పురాణాభ్యాం వేదం సముపబ్రృంహయేత్" என்று, வேதத்தின் பொருளை சங்கிரக விஸ்தார அர்த்த நிர்ணயங்களாக ஸ்மிருதி இதிகாசபுராணங்கள் செய்யப்பட்டன. "స్మృతిస్తు ధర్మసంహితా" என்று, ஸ்மிருதிகளில் தர்மங்களை நிறைத்து, "మహర్షిభిః వేదార్థస్మరణంస్మృతిః" என்று, பரம ஆப்தர்களான மநு, அத்ரி, விஷ்ணு, ஆரிதர், யாஞ்ஞவல்கியர் முதலிய மகாரிஷிகள் வேதார்த்தங்களை யநுசரித்துச் சொன்ன ஸ்மிருதிகளைப்போலவே, "ఇతిహాస పురావృత్తం పర్యోపదేశః ఆస్తేఽస్మిన్ ఇతిహాసం" என்றபடி, பூர்வ பாரம்பரிய விருத்தாந்தங்களை உபதேசமுகமாக வேதார்த்தங்களோடு பிரதிபாதிக்கிற பகவற்கீதையுடன் பிரகாசிக்கும் ஐந்தாம்வேதமான ஸ்ரீமஹாபாரதமும், ஸ்ரீமத்ராமாயணமுமாகும் இதிகாசங்களையும்,

" పురా భవతి పురాణం " என்று, பூர்வமாகவுண்டாயிருக்கின்ற புராணங்களென்னும், " సర్గశ్చ ప్రతిసర్గశ్చ వంశో మన్వన్తరాణిచ । వంశానుచరితంచైవ పురాణం పంచలక్షణమ్ " என்று, சர்க்கங்கள், பிரதிசர்க்கங்கள், வமிசங்கள், மநுவந்தரங்கள், வமிசாநுசரித்திரங்கள் ஆகிய ஐந்து லக்ஷணங்களையுடைய புராணங்களையும், ஸ்பஷ்டமாய்ச்சொல்லி யிருக்கின்றார்கள். ஆகையால், வேதத்தைப் படிப்பித்தவர்களின் சரிதங்களைப் புராணங்கள் கூறுமேயல்லாமல் வேறில்லை. அந்தப்புராணங்கள் கற்பனையானால் வேதமும், ஸ்மிருதியும் கற்பனைகளேயாம். வேத ஸ்மிருதிகளிலேயே அன்னோர் சரித்திரங்கள் கூறப்பட்டிருக்கின்றனவென்று சொல்லித் தப்பித்துக்கொள்ள வழிதேடினாலும், அவைபுராணம்போல் விளக்கா. ஆகையால் புராணத்தைக் கற்பனையென்பது ஆராய்ச்சியற்ற குறைவாம்.

வேதசாகா பேதங்கள்.

(விஷ்ணுபுராணத்திலிருந் தெடுத்தது.)

வியாசமகாமுனிவர் வேதங்களைப் பிரிக்கும்படி சதுர்முகராலே நியமிக்கப்பட்டுத் தாம் பிரித்த வேதசாகைகளை அத்தியயன பரம்பரையினாலே பிரவர்த்திப்பிக்க வல்லவர்களான சிஷ்யர்களை ஆராய்ந்து தேடி இருக்குவேதத்திற்குப் பைலமகாமுனியையும், யசுர்வேதத்திற்குவைசம்பாயனமகாமுனியையும், சாமவேதத்திற்கு ஜயிமினிமுனீந்திரரையும், அதர்வணவேதத்திற்கு சுமந்துமுனிவரையும், இதிகாச புராணங்களுக்கு மகாபுத்திசாலியான ரோமகர்ஷணரென்கிற சூதரையும், பரிக்கிரகித் தருளினர். அத்துவர்யு, உத்காதா, ஹோதா, பிரம்மா என்னப்பட்ட (சாதுர்ஹோத்திரம்) நால்வகையான ரித்துவிக்குகளின் காரியமுள்ளதாகையாலே யாகஹேதுவாயிருந்த வேதமொன்றையே நான்காகப்பிரித்து அவைகளினாலே யக்கியங்களை நடத்தியருளினர். எப்படியென்றால், யசுர்வேதங்களினாலே அத்துவர்யு காரியத்தையும், இருக்குவேதங்களினாலே ஹோதாவின்காரியத்தையும், சாமவேதங்களினாலே உத்காதாவின் காரியத்தையும், இந்த மூன்று வேதங்களினாலேயும் ராஜாக்களுக்கு வேண்டிய சாந்திக பவுஷ்டிகாதிகளையுடைய அதர்வண வேதத்தினாலேயும், பிரம்மாவின் காரியத்தையும் ஏற்படுத்தினர்.

வேதங்களைப்பிரித்தவிதமெப்படியெனில், அகண்டமான வேதத்திலிருந்து இருக்குகளை யெல்லாம் பிரித்தெடுத்து ஒன்றாக்கி இருக்குவேதமென்றும், யசுசுகளைப் பிரித்தெடுத்துக் கூட்டி யசுர்வேதமென்றும், சாமங்களைப் பிரித்தெடுத்துச்சேர்த்துச் சாமவேதமென்றும், மூன்றுவேதங்களைச்செய்து முக்கியமாய் ராஜாக்களுக்கு வேண்டிய காரியங்களையும், புரோகித கிருத்தியத்தையும் நிறைவேற்றும்பொருட்டு அதர்வபாகங்களை யெல்லாஞ் சேர்த்தெடுத்து அதர்வணவேதத்தையுஞ் செய்தருளினர். இவ்வகையாக முன்பு ஒன்றாயிருந்த வேதவிருக்ஷமானது நான்காகப் பிரிந்து பின்பு பெருங் காடாயிற்று.

அந்த வரலாறாவன: பைலமகாரிஷி அந்த ருக்குவேதத்தை இரண்டு சம்ஹிதைகளாக்கி, இந்திரப்பிரமிதி யென்பவருக்கு ஒன்றையும் பாஷ்களர் என்பவருக்கு மற்றொன்றையும் பிரசாதித்தார். அந்த மகாமதியான பாஷ்களமுனிவர் தாம் பெற்ற சம்ஹிதையை நான்காக்கிப் போத்தியர் முதலான நால்வருக்குப் பிரசாதித்தார். அந்தப் போத்தியரும், அக்கினி மாடகரும், யாக்கியவல்கியரும், பராசர ரென்று பெயர் கொண்ட மற்றொருவரும், அந்த ருக்குவேதசாகையின் பிரிவான சாகைகளைக் கிரகித்து நடத்திவந்தார்கள். அந்த இந்திரப்பிரமிதி யென்கிற முனிவர் தாம் ஓதின ருக்குவேதசம்ஹிதையை தங்குமாரரான மாண்டூகேயரென்பவருக்குப் பிரசாதித்தார். அந்தச் சம்ஹிதையானது புத்திரரும் சிஷ்யரும் ஆகிய முறையினாலே சிஷ்யபிரசிஷ்ய பரம்பரையிலே வந்து கொண்டிருந்தது. இப்படியிருக்கையில் வேதமித்திரனென்கிற சாகல்யர் தாமோதின இந்திரப்பிரமிதி சாகையை ஐந்தாகச்செய்து தம்முடைய மாணாக்க ராவருக்குக் கொடுத்தார். அந்த ஐவர் நாமதேயங்க ளாவன: முத்கலன், கோமுகன், வாச்சியன், சாகலீயன், சைசிரன் என்பனவாம். அந்தச்சாகலியருடைய சப்பிரமசாரியரான சாகபூர்ண ரென்பவர் இந்திரப்பிரமிதி சங்கிதையை மூன்றாய்ச் செய்து, நிருத்தமென்கிற வேதாங்க மொன்றுஞ்செய்து ஆக நான்கையும் தன் சிஷரான கிரவுஞ்சன், வைதாளிகன், பலாகன், நிருத்தன் என்னும் நால்வருக்கும் முறையே பிரசாதித்தார். முன்சொல்லப்பட்ட சாகலியருடைய சப்பிரமசாரியான பாஷ்கலியென்பவர் அந்தஇந்திரப்பிரமிதிசாகையை மூன்று சாகைகளாக்கி காலாயனி, காக்கியர், ஜபர் என்கிற சிஷியர் மூவருக்குக் கொடுத்தார். இப்படியாக ருக்குவேதத்தில் சாகைகள் பிரதிசாகைகள், அநுசாகைகள் அநேக முண்டாயின. ஆகையால், ருக்குவேத சாகா கர்த்தாக்களான பஹ்ருசர்கள் இவர்களென்றறிக.

ஆரியமதசித்தாந்தப்
பிரகரணம்.

விசிஷ்டாத்துவைதம்.

(௩௪-ம் பக்கத் தொடர்.)

மேற்சொல்லப்பட்ட பிரகிருதி வியுக்தாத்து மாநுபவ மென்னும் சுழுத்தியிற் கலந்திருப்பதையே ஜீவபிரம்மைக்கிய மென்று பிரமிப்பதை திரிசியமாக அறிய வேண்டு மென்றும்; சொப்பனுபயமான உலகம் பொய்யாகவும், காரணுபின்னமாகவும் திருடமான விசுவாசமுடையவர்களுக்கு, ஞாதுரு, ஞான, ஞேயரூபமான பந்தங்கள் தொலையு மென்றும்; பேததரிசனம் பயோற்பத்தியாகையாலே எப்போதும் அபேததரிசனமே அத்தியந்த முக்திக்ஷயமாகின்றதென்றும்; சித்து, அசித்துப்பதார்த்தங்கள் இரண்டும் பொய்யான தாகையால் பரமான்மாவுக்குச் சிதந்தர மில்லை யென்றும்; ஜீவேசுவரர்களுக்கு விவகாரிகபேதமிருந்து ஏகத்துவம் உண்டாகு மாகையாலே,—

"మమైవాంశో జీవలోకే జీవభూత స్సనాతనాః"

என்று கீதாவாக்கிய மூறையிடுகின்றதென்றும்; பிரம்மம் சிதசித்துக்களுக்கு விலக்ஷணமாகாதென்றும்; ஜீவான்மா, பரமான்மா சித்ரூபிகளாகையாலே இரண்டும் ஒரு வஸ்துவேயென்றும்; அவித்தியை மாயை என்னும் உபாதிகளில் சிக்கிக்கொண்டதினுலேயே, ஜீவன் ஈசுவரன் என ஒரு ஜலத்திற்கே கடதடாக ஜலமென்பதுபோல நாமங்களுண்டாயிற்றென்றும்; பரமான்மா அருபாபரிச்சின்னனகையால் வைகுண்டவாச மவருக்குண்டாகாதென்றும்; பரிச்சின்ன லோக நிவாசியான பிரம்மமென்னும் விஷ்ணுவினுலேயே சாரூப்பியாதி முக்திகள் கிடைத்தாலு மதுவும் பரிச்சின்னங்களாகின்றமையால் அத்தியந்திக முக்திக ளாகா வென்றும்; விவகாரிக ஜீவேச்சுவரபேதங்களை யங்கீகரித்து, பேதசுருதிகளுக்கும், சுழுத்தி யவஸ்தாநுபூத அத்துவிதீய பரப்பிரம்மத்தை அங்கீகரித்து, அபேதசுருதிகளுக்கும் கதிகற்பனைசெய்யப்பட்டிருக்கின்றனவென்றும்; துவைதம் விசிஷ்டாத்துவைதத்திற்கும், விசிஷ்டாத்துவைதம் அத்துவைதத்திற்கும் கிரமமாய் சாதனங்களாகின்றதென்றும் சொல்லுகின்றார்கள். இவ்விஷயங்களை நன்றாய்ப் பரிசீலிக்குமவர்களுக்கு தத்துவவித்துக்களு மிவ்விதமாய்க் கூறுவார்களாவென்று ஒரு ஆச்சரியமுண்டாகும்.

త్రైగుణ్య విషయా వేదాః నిస్త్రైగుణ్యో భవార్జున॥

எனப் பகவத் கீதையிலும்,

శాస్త్రాణ్యపిచ సర్వాణి త్రివిధాని మహామతే ।
యాని సత్వం పరం విష్ణుం వదంతి పరమేశ్వరం ॥

తాని సర్వాణి శాస్త్రాణి సాత్వికాని మతానివై।
ప్రజాపతిం కృశానుంచ తథా దేవిం సరస్వతీం ॥

పరత్వేనా వదచ్ఛాస్త్రం రాజసం పరిరక్షతే ।
తమః ప్రవర్తకం వక్తితత్తామ సముదాహృతం ॥

எனக் காருடத்திலும்,

హిరణ్యగర్భో రజసా తమసా శంకర స్స్వయం ।
సత్వేన సర్వదా విష్ణు సర్వగస్సదసన్మయః ॥

என லிங்கத்திலும்,

శృణుదేవి ప్రవక్ష్యామి తామసాని యథాక్రమాత్ ।
యేషాం శ్రవణమాత్రేణ పాతిత్యం జ్ఞానినామపి ॥

ప్రథమంవామయైవోక్తం శైవంపాశుపతాదికం ।
మచ్ఛక్త్యా వేశితైర్విప్రైస్సంప్రోక్తం సతతం పరం ॥

కాణాదేనతు సంప్రోక్తం శాస్త్రం వైశేషికం మహత్।
గౌతమేన తథా న్యాయం సాఖ్యం తు కపిలేనవై ॥

ధిషణేనతథాప్రోక్తం చార్వాక మతిగర్హితం ।
దైత్యానాం నాశనార్థాయ విష్ణునాబుద్ధరూపిణా ॥

బౌద్ధశాస్త్రంతు సంప్రోక్తం నగ్ననీల పటాదికం ।
మాయావాద మసచ్ఛాస్త్రం ప్రచ్ఛన్నం బౌద్ధముచ్యతే ॥

మయైవకథ్యతేదేవి కలౌ బ్రాహ్మణ రూపిణే ।
వేదార్థవన్మహాశాస్త్రం మిథ్యావాదమవైదికం ॥

మయైవ వక్ష్యతేదేవి జగతానాశకారణాత్ ।
ద్విజన్మనాజైమినినా పూర్వం వేదమపార్థకం ॥

నిరీశ్వరేణవాదేన కృతం శాస్త్రం మహత్తరం ।
శాస్త్రాణిమాని గిరిజేతా మసాని నిబోధమే ॥

எனப் பாத்மத்திலும் கூறியிருக்கின்றது.

இவ்வண்ணம் வேதங்களும், அவற்றில் உபப்ருஹ்மணங்களும், சாத்துவீக, ராஜச, தாமசங்கள் என்று மூன்றுகுணம் பிரதானமாயிருப்பதாய்த் தெரிவிக்கின்றன.

జాయమానంహి పురుషం యః పశ్యేన్మధుసూదనః ।
సాత్వికస్సతువిజ్ఞేయ సవై మోక్షార్థ చింతకః ॥

எனச் சொன்னபடி, ஈச்சுவர நிர்ஹேதுகஜாயமான கிருபையுண்டான பரமாஸ்திகனுன மோக்ஷார்த்தி, திரிகுண மிசிரமமாய் ராக்ஷதப் பிற

ப்புகளுக்கு உருசியாயிருக்கும் ராஜசதாமசோக்திகளில் சிக்காமல், "[illegible]" எனக் கூறியபடி, கல்லில் கலந்திருக்கும் இரத்தினங்களைப்போலே, எல்லா சாஸ்திரங்களில் மிசிரமமா யிருக்கும் கேவல சுத்தசாத்துவீகோக்திகளையே பிடித்து, பகவத் விஷயத்தில் தன் சொரூபாநுரூபமான பிரபத்தியைச் செய்து மோக்ஷமடைவான். திரிசியம் நசிக்குமென்று சொல்லுவது, திரிகுணயுக்தமாயிருக்கும் பிரகிருதி ஈசுவர சங்கற்பானு சாரமாய் அடையும் சொரூபங்களுடைய மாறுபாடான விகாரத்தில் வர்த்திக்குமே யன்றி, சொரூபவிஷயத்திலல்ல. பஞ்சபூதமயமான விருக்ஷம் எரிந்து அதின் ரூபம் நசித்தாப்போற்காட்டினாலும், எரிந்ததான பூததத்துவங்கள் அந்தந்த ரூபங்களிலேயே லயமடையுமேயல்லது, வஸ்து சத்துவ சொரூபங்கள் நசிக்கிறதில்லை. அந்த பூதங்களானது அதிசூக்ஷ்மாவஸ்தைக ளடைந்து கிரமமாய் ஈசுவரனிடம் லயிக்காதோவென்றால், ஜடமான அசித் வஸ்து அஜடமான பிரம்மவஸ்துவில் சேராதாகையால், ஜலத்தில் சேற்று ஜலம் சேர்ந்தாப்போல் சம்ஹாரதசையி லேற்பட்டாலும், நீர் தேர்ந்தபோது சேறு வேறுபட்டது போல், கார்யோன்முகாவஸ்தையில் ஜடம் ஜடமாயும், அஜட மஜடமாயும் மேற்படாமற் போகாது. ஆகையால், செடியாயிருப்பதே உலர்ந்து தாருவென்று சொல்லப்பட்டு, எரிந்து நெருப்பாய்க் குளிர்ந்து கரியானதுபோல பிராக்ருதரூபங்கள் மாறிக்கொண்டு வருவதினாலேயே "யத்ருஶ்யம்தந்நஶ்யம்" என்பதென்று தெளிந்து கொள்ளுவதற்குப் பாதக மில்லை. ஆகையால் அந்தந்த பதார்த்த சொரூபங்க ளில்லாமற் போகுமென்று கூறுவது கேவலம் அசங்கதமாயிருக்கின்றது. சுத்தசாத்விக ஸ்தானமான அப்ராக்ருதமென்று சொல்லப்படும் "திரிபாத்விபூதியில்" விகாரங்கள் அணுவளவு மில்லாமல் சொரூபங்கள் ஈச்சுவரகைங்கரியோப யுக்தமாய் நித்யமாயிருக்கும். காரணத்திற்கு ஜகம் அபின்னமென்று சொல்லிக்கொண்டு அது சொப்பன திரிசியத்தைப் போன்றவை யென்றும், பொய் யென்றுங் கூறுவ தொப்பத் தகுந்தவை யன்று.

அப்படிக் கூறுவதானாலும், காரணமான வஸ்துவும் மித்தியாரூபமே யாகவேண்டிவரும். அன்றியும், ஒரு தரித்திரன் பிரபஞ்சத்தில் தான்பார்த்த ராஜனே தானாகவும், அவன் செல்வங்கள் தனதாகவுங் கொண்டு நினைத்தபோது, அந்த விவகாரம் தன் மனதில், கண்ணாடியிலே பிரதிபிம்பித்ததுபோலத் தோன்றினாலும், அப்படிச் சிந்திப்பதைவிட்டு வேறொருவிஷயத்தில் மனஞ்சென்றபோதும், கண்ணாடியைமறைத்தபோதும், அதுவனாயில் அதில் பிரதிபிம்பித்த பர்வதபாவ மெதுவும் தோன்றாது. இவ்வளவிலேயே, ராஜனும், அவன் செல்வமும், பிம்பித்த பர்வதமும் உலகிலில்லாமற் போகுமா ? இப்படி எதுவும் இருக்கின்றதேயன்றி இல்லாமற்போகவில்லையல்லவா ? இதை ஈச்சுவர சிருஷ்டிக்கு உபமானிக்கும்போது ஈச்சுவரனும் அசக்தனான சேதனனைப்போலே, முன்னிருந்த ஒரு பிரபஞ்சத்தைத் தன்மனதில் பிரதிபலிக்கச் செய்துகொண்டிருக்கிறானென்றும், தன்மனம் மற்றோர் விஷயத்திற்கு மாறியபோது, நினைத்த பிரபஞ்சம் தனக்குத்தானே மாயமாய்ப் போகுமென்றும், அதுவனாயி லிருக்கும் எந்தப் பிரபஞ்சத்தை தான்மனதில் நினைத்தானோ அந்தப் பிரபஞ்சம் ஸ்திரமா யப்படியே யிருக்கிறதென்றும், தானா யொரு அபூர்வமான பிரபஞ்சஞ் சிருஷ்டியாகும்படிச் செய்யமாட்டானென்றுஞ் சொல்லவேண்டிவரும்.

இப்படிச் சத்திய சங்கற்பனான ஈச்சுவரனிடத்தில், அஞ்ஞான சக்திகளை ஆகாய புஷ்பங்களைப்போல் கற்பிப்பதைக் காட்டிலும், ஈச்சுவரனும் சிதசித்துக்களும் இல்லை என்று பயிரங்கமாய்க் கூறி உலகத்தினர் ஆஸ்திகரென்று நினைத்துக் கொள்ளாவண்ணஞ் செய்வதே யுக்தமென்று தோன்றுகிறது. இதுவுமல்லாமல் பொய்யென்று சொல்லும் இவ்வுலகம் சர்வஞ்ஞத்வ சர்வ சக்தித்வாதி லக்ஷணங்களுடைய பிரம்மத்தினுடைய சொப்பனத்தில் கற்பிதமென்றும், அந்தப் பிரம்மம் விழித்தபோது அது யாவும் இல்லாமற் போகு மென்றுஞ் சொல்லவேண்டிவரும். அதினாலே அசித்து என்றால் பிரகிருதி பிரம்மம் அவஸ்தாதிரயத்தில் வியாபித்து சொப்பனாதிகளில் பிராந்திக்குட்பட்டுக் கொண்டிருக்கின்றதென்றும், அந்த சொப்பன கற்பிதங்களான சேதனர்களுக்கு, பிரம்மத்தினுடைய சொப்பனம் போகும்வனாயில் எவ்வளவு திருடாத்யவசாயம் அடைந்தபோதிலும் அது நிஷ்பலமாய், எவருமப்படியே ஜன்மபரம்பரைகளுக்குட்பட்டிருப்பதே சித்திக்குமே யல்லது மோக்ஷபிரயத்தினஞ் செய்யவேண்டிய தில்லையென்றும், அப்படியானபோது வேதமிருப்பதனவசிய மென்றும் போதைப்படுமல்லவா ? இவ்வித விபரீத ஞானமுடையவர்களுக்குத் தத்வத்திரயஞான மொரு பந்தமேயென்பதற்கு ஐயங்கொள்ள வேண்டியதில்லை.—(வரும்.)

அத்வைத மதம்.

கொல்லமாநகர்

பூ. பத்மநாபாசாரியாரவர்கள்

செய்த

உபந்நியாச சங்கிரகம்.

இந்து மதாபிமான சமாஜியர்காள்!

அஞ்ஞானத்தினால் பந்தப்பட்டிருக்கிற ஜீவர்களுய்யும் பொருட்டு, நிஷ்களங்கமாய் ஸ்படிகம் போன்ற சுத்த பிர்ம்மத்திற்குச் சுருதிப்பிரமாணங்கள் மூவ்வித சொரூபங்களைக் கற்பிக்கின்றன; அவையாவன:—சாமானியம், விசேஷம், காருண்யம் என்பவைகளே யாம். சாமானியமென்பது - சராசரப் பிரபஞ்ச வடிவமாக எங்கும் வியாபித்திருக்கும் விராட் சொரூபமாம்; விசேஷமென்பது - தம்மை வழிபடு மடியார்கட்குப் பதமுக்திகளை யநுக்கிரகித் தருள்செய்தற்கு சத்தியலோகம், வைகுண்டம், கைலாசம் என்னு மூன்று லோகங்களிடத்தினும் ஏனைய புண்யஸ்தலங்களினும் எழுந்தருளி யிராநின்ற அநந்த மூர்த்தி பேதமாம்; காருண்யமென்பது-சாதன சதுஷ்டய சம்பன்னனுக்கு சர்வோத் கிருஷ்ட பரமஸ்தான புனராவர்த்தி ரகித சகல சாஸ்திர தாற்பரிய நாமஜாதிக் கிரியாவாசனைபுகாத மனோ வாசா மகோசரமான நித்தியானந்த சொரூபமாயிருக்கிற விதேக கைவல்லியத்தினை யடையும் படிக்கான மெய்ஞ்ஞானோபதேசஞ்செய்யும்பொருட்டு மானிடச்சட்டையைப் பூண்டு குருமூர்த்தமா யெழுந்தருளும் தெக்ஷணாமூர்த்தி சொரூபமாம். இத்தெக்ஷணாமூர்த்தி சொரூபத்துவாராமாத்திரமே மெய்ஞ்ஞானஞ் சித்தித்தற்கிடமாயிருத்தலால் நாம் அக்குருமூர்த்தத்தைத்தானே ஆரம்பத்தில் நமஸ்கரிப்போமாக.

சுலோகம்.

சைதந்யம் ஶாஶ்வதம் ஶாந்தம்
வியோமாதீதம் நிரஞ்சனம்
நாதபிந்து களாதீதம்
தஸ்மை ஸ்ரீகுரவே நமஃ.

விருத்தம்.

கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா
றங்கமுதற் கற்றகேள்வி
வல்லார்க ணால்வருக்கு வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப்பாலா
யெல்லாமா யல்லவுமா யிருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம
னினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

ஸ்ரீ அகண்ட சச்சிதானந்த நித்ய பரிபூரண ஸ்வயம்ப்ரகாஸ தத்பத ரூபேணும், பஞ்சகோச வ்யதிரிக்த துரியஸ்வரூப மஹாநுபாவே! திரிபுடி திரிகுண திரிகால ஷட்பாவ விகார ஹரிஷட்வர்க்க ரஹித நிரூபாதிகனும், ஆதிமத்தியாந்த ஸஜாதிக விஜாதிக ஸ்வகதபேத ரஹித சரீரத்திரய விலக்ஷண ஜாக்ராதி சப்தோபாதிக சாக்ஷிகே! பிபிலிகாதி ப்ரம்ம பரியந்த சம்ரக்ஷகே! கேசர்யாதி சாம்பவி பஞ்சமுத்ரிநிலயே! சமயாதீத மனோகோசர மஹாவாக்ய ஸஹித ரஹித சின்மயா பரோக்ஷ சத்ய க்ஞானனந்த அஹிதபதரூபே! ஆருதார ப்ரமாண ப்ரமேய ஆதார ஆதேய கார்யகாரண இயமாதி சமாதியந்த அஷ்டாங்கயோக ஜகஜீவ பரகாரணே! நிராங்கார நிர்மல உபமான உபமேய லக்ஷண லக்ஷ்ய நிஷ்கர்ய நிர்விகார மானும், துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலிகே! அத்வைத சைதன்ய பராபர க்ஞானக்ஞான அபேதாபாவ சதுர்த்த சலோக சர்வாத்ம கோடி ஸம்ரக்ஷகே! விஸ்வாதி மோகனதீத வேதாந்தரங்க சுப்ரம்ம சிதானந்த சிதாகாச ரூபே! ஸ்ரீசத்குரும்பாதாரவிந்தம் நமஸ்தே! நமஸ்தே! நமஸ்தே!

சாதகரான சிஷ்யருக்கு உபதேசஞ் செய்யுமதிகாரபேதத்தால் போதககுரு, வேதககுரு, நிஷிதகுரு, காமியகுரு, சூசககுரு, வாசககுரு, காரககுரு, விஹிதகுரு வென அஷ்டப்பிரகாரமாவர். அவர்களில் சாஸ்திரார்த்தம் போதிக்கிறவனே போதககுரு, தத்துவதரிசகனே வேதககுரு, வசியாகருஷணதிகளால் இகலோகத்திற் சுகமும் பரலோகத்திற் றுக்கமுங் கொடுக்கிறவனே நிஷிதகுரு, சுகர்மோபதேசத்தால் பரங்களில் சுகமெய்தப் பண்ணுமவனே காமியகுரு, விவேகமூகத்தால் சமாதி ஷட்குணப் பிரதாயகனே சூசககுரு, விஷயமித்யா தர்சனத்தால் ஆத்மானுராகப் பிரதாயகனே வாசககுரு, ஆத்மபிர்ம்மயிக்கியஞ்ஞானப் பிரதாயகனே காரககுரு, சம்சய நிரசனத் துவாரத்தால் நித்திய முத்திப் பிரதாயகனே விஹிதகுருவெனவாம்.

அன்பர்காள்!

நாம் இப்பிரபஞ்சத்தினை நோக்குழி இச்சராசரங்களானவை இயற்கையா லமையப்பெற்றனவோ? அன்றி யொருவரால் சிருஷ்டிக்கப்பட்டனவோ? என்னு மாசங்கை நிகழ்கின்றது. இனைய சங்கைகளை நிவிர்த்திக்குமாறு தார்க்கிக சாஸ்திரத்தில் அஷ்டப்பிரமாணங்களை, மஹான்கள் விதித்திருக்கிறார்கள். அவையாவன:—பிரத்தியக்ஷம், அனுமானம், ஆகமம், அருத்தாபத்தி, உபமானம், அபாவம், சம்பவம், ஐதீகம் என்ப

னவாம். நாம் இவைகளை யாதாரமாக வைத்துக் கொண்டு பரியாலோசிப்போமாக.

இப்பிரபஞ்சம் அநித்தியமாகத் தோற்றப்படுகிறதால் இவற்றினைக் காரியமென்றே கொள்ளற்பாலவை. காரியமாயின் இவற்றிற்குக் காரணமொன்று இருத்தல் வேண்டுமென் றநுமானித்தல் அத்தியாவசியகம். இப்பிரமாணத்தினை யநுசரித்தே நமது முன்னோர்கள் வெளியிட்டிருக்கும் செய்யுட்கள் வருமாறு:—

விருத்தம்.

மண்டபமாதி கண்டோர்
மயனுள னென்னல்போலும்
குண்டல முதற்கண்டோர் பொற்
கொல்லனுண் டென்னல்போலும்
ஒண்டுகில் கண்டோர் நெய்தோ
னொருவனுண் டென்னல்போலும்
அண்டமற் றகண்டஞ்செய்தோ
னுளனென வறிவாய்நெஞ்சே.

வானின்றி மழையுமில்லை
வயலின்றி விளைவுமில்லை
ஆனின்றிக் கன்றுமில்லை
யரியின்றி யொளியுமில்லை
கோனின்றிக் காவலில்லை
குமரர் தாயின்றியில்லை
மேனின்ற கடவுளின்றி
மேதினி யில்லைமாதோ.

இனைய செய்யுட்களால் அண்டாண்ட பிர்மாண்டங்களையும் தோற்றுவிக்கும் ஒரு வஸ்து உண்டென்பது நிச்சயிக்கப்படும். இவ்வஸ்துவின்ச் சுருதிப்பிராணங்கள் :—

கைவல்லியம்.

நித்தியம் பூரணமேகம் பரமார்த்தம்
பரப்பிரம நிதானஞ் சாந்தஞ்
சத்தியங் கேவலந் துரியஞ் சமந்திருக்குக்
கூடஸ்தன் சாக்ஷிபோதஞ்
சுத்தமிலக்கியஞ் சநாதனஞ் சிவன்
றத்துவம் விண்சோதி யான்மா
முத்தம்விபு சூக்குமமென் றிவ்வண்ணம்
விதிகுணங்கண் மொழியும்வேதம். (க)

அசல நிரஞ்சன மமிர்த மப்பிரமேயம்
விமலம் வசனாதித
மசட மநாமய மசங்க மதுல நிரந்தர
மகண்ட நிருபாகண்ட
மசமனந்த மவினாசி நிர்க்குண
நிட்கள நிரவயவ மநாதி
யசரீர மவிகார மத்துவித
மெனவிலக்கு மநேகமுண்டே. (உ)

இன்னவகை விதிவிலக்குக் குணங்கணன்றாச்
சேர்த்தொருமித் தெல்லாங் கூட்டிச்
சொன்னபொரு ளொன்றன்றி யிரண்டில்லை
யொருபொருளைச் சொல்லுஞ்சொற்கள்
பின்னபத மாமதனாற் சத்தாதி
குணப்பொருளாம் பிரமமேக
மன்னபொரு ளொருமையறிந் தகண்டபரி
பூரணமா யாவாய்நீயே. (ங)

நிர்க்குணவஸ்துவின் குணங்களுரைப்பதுதாய்
மலடியென னிகரென்னாதே
சற்குணனே வஸ்துநிலை யுரையாமல
லறியவல்ல சதுரருண்டோ
நற்குணவேதங்க ளிந்தச் சீவன்முத்தி
பெறப்பிரம ஞானந்தோன்ற
சொற்குணங்கள் பிரமத்தின் குணங்களல்ல
பிரமமாஞ் சொரூபந்தானே. (ச)

எனவுங் கோஷிக்கின்றன. ஆயினும் பாரமார்த்திகத்தில் மேற்கூறிப்போந்த அஷ்டவிதப்பிரமாணங்களினாலு மளத்தற்பாலதன்று; என்னை? திரிபுடி ரகிதமாதலின் பிரத்தியக்ஷத்தானும், காரியகாரண ரகிதமாதலின் அநுமானத்தானும், நாதாதீதமாதலின் ஆகமத்தானும், குறிகடந்ததாதலின் அருத்தாபத்தியினானும், சுசாதி விசாதிசுகதபேதமிறந்ததாதலின் உபமானத்தானும், நான்குகாலத்துஞ் சதோதயமாக விளங்கலின் அபாவத்தானும், பிண்டப்பொருளும் பிண்டித்தபொருளு மன்றாகலின் சம்பவத்தானும், ஜெகஜீவபரம்போலத் தொன்றுதொட்டு வழங்கலன்றாகலின் ஐதீகத்தானும் அளத்தற்கரிதாம். எனினும், ஜாக்கிரத்தில் கடாதிசத்தே விதேக கைவல்லியபரியந்தம் சுழுத்தி முதலான அவஸ்தையிற் றோன்றாமல், எழுந்தபோது முன்போலத் தோன்றுகையால் வியாவகாரிகசத்து, சுத்திகாரசத சொப்பன விஷயாதி சத்து தோன்றுகிற காலத் தல்லாமல் விழித்தகாலத் தின்றாகையால் பிராதிபாஸிகசத்து, சமஸ்தகற்பனைக்கு மதிஷ்டானமாய்த் தோன்றா தடங்காதிருக்கிற பிர்ம்ம சத்தே பாரமார்த்திக சத்து; என்னும் சத்துதிரயத்து ளொன்றாய விவகாரதிசையைப்பற்றி விசாரிக்குங்காலத்து மாநுஷீக புத்திக்குப் பிரம்மத்தை யுண்டுபண்ணுகிறதால் பிரம்மம் என்னும் பெயர் இதற்குற்றதெனச் சிலரும், இந்நாமத்தினும் விசிஷ்டமானது பூவுலகத்தின்மையால் இந்நாமத்தினையே வேதங்கள் கோஷிக்கின்றன வென வேறுசிலருங்கூறுவர்; எனினும் ப்ருஹி எனும் தாதுவடியாகப்பிறந்து விர்த்தியென்னும் பொருணிறைந்த பெரியது என வெளிப்பட்ட தொன்றென்பதே ஆன்றோர்கருத்து.—(வரும்.)

பொதுப்பிரகரணம்.

விலைமாதர் விலக்கம்.

(௪௪-ம் பக்கத் தொடர்.)

புருஷர்களோ அவ்வேசைகள் காட்டுகின்ற மதனஜால சொக்குப்பொடியிற் கட்டுப்பட்டு ஸ்திரீ வசியத்தையும், சுக்கிலக்கட்டையும், மேனிமினுக்கலையும், பணக்கூட்டத்தையும், தேவப்பிரார்த்தனையையும், ஏவலாதித்தொழில்களையும் வஞ்சனையின்றிச்செய்துப்பார்த்து, அவர்கள் இஷ்டப்படிக்கு ஒன்றுங் கிட்டப்பெருமல் விசனப்பட்டு நோய்கொண்டு அநேகர் இறக்கிருர்கள். சிலர் அவர்கள்போகின்ற வழிகள் கூட்டங்கள் முதலான இடங்களிற்றேடிப்பார்த்து மின்னும் பின்னும் நோக்கிப் பித்தேறி தூக்கமற்று திருடியுதைப்பட்டு அவமானப்பட் டிறக்கிருர்கள்.

ஓய் மதியுள்ள மாணுக்கனே! தன்மனைவியான கற்புள்ளவள் தன் இஷ்டப்படிக்கு எம்பெருமானுல் கிடைத்திருக்கவும், அவளோடுகூடி மகிழ்ந்து நல்லறத்தைப் பெற்றிருந்து எம்முடைய அப்பனை வாழ்த்தித் தங்கள்காலத்தை நன்ருக்கி மறுமைப் பயனைக் கோரிக்கொள்ள லாகாதா? அப்படிக்குச் செய்யாத இவன் மகாபாதகனுய் "செம்மையிலறஞ்செய்யாதார் திரவியஞ்சிதையவேண்டி, நம்மையுங் கள்ளுஞ்சூதும் நான்முகன் படைத்தவாறே" என்றபடிக்குக் கொலைகளவு செய்தவர்களைச் சிக்ஷிக்கும் ராஜகருவிகளைப்போலே தீநிரயஞ்சேர்ப்பிக்கத்தக்க வேசைகள் தாசிகளென்று பேரிட்டுக்கொண்டு, விஷங்கலந்த பாலமுதுபோன்ற கவிகளையும், நடனங்களையுங் காட்டி, இந்தக்கிரீடாமிருகங்களைத், தங்கள் விழிகளாகிற வலையை வீசிப்பிடித்துத் தங்கள் கடிதடமாகிற விஷசர்ப்பங்களைக் கடிக்கவிட்டு, நஞ்சுநிறைந்த தங்கள் முலைகளாகிற கும்பஸ்தலத்தினுல் நன்ருக மொத்தலிட்டுக், கொடியதான எமபாசத்தை யொத்த கைகளால் ஆரத்தழுவிப்பிடித்து, அளவிறந்த பேர்களது உச்சிஷ்டமுண்ட தங்கள் ஊத்தைவாயி லுள்ள நாற்றக் கொடுங்கஷ்ட நீரையூட்டி, அவர்கள் கையிலுள்ள பொருளையெல்லாம் மடிமுதல் தலைவரையில் தடவி நயங்காட்டிப் பிடித்துப் பறித்துக்கொள்ளுகிருர்கள்.

இந்த வேசையென்கிற பிரம்மராக்ஷஸானது எவனைப்பிடிக்கிறதோ அவனுனவன் யானையுண்ட விளங்கனிபோலே தன் கல்வி, செல்வம், கீர்த்தி, தேவவிசுவாசம், வணக்கம், வாய்மை, தவம், தருமம், குலம், ஆசாரம், ஒழுக்கம், முறைமை, சரீரம், அழகு, பருவம் முதலியவைகளுங் கெட்டு நரகத்திற்கே யாளாவன். இந்த தீயபரத்தை யென்கிற பாபிஷ்டியின் கையில் அகப்பட்டுத் தேறித்தெளிந்தோர் அருமையாளராவர். தர்மஞானமில்லாப் பணக்காரராகிற பிணங்களைப் பிடுங்கித் தின்னும்படியான பாழுங் கழுகுக்கூட்டங்களாகிறவர்கள் இக்கணிகைகளென் றுணருவீராக. பாவப்பொதிமூட்டைகளான மகாபாதகிக ளென்னும் பரத்தையருக்குத் தங்கள் மீது அன்பு பெருகவேண்டி அடிமைத்தொழில் செய்து அவர்கள் காற்கடையில் வீழ்ந்து கெஞ்சிக் கூத்தாடி அவர்களுக்கு இச்சையான புருஷனையுஞ் சேர்ப்பித்து பலபேரெச்சிற்படிக்கமான அவர்கள் ஊத்தைவாய்களாகிற படிக்கத்தைச் சுவைத்தலுக்குப் பதருகிருர்களிறே சிலபுருஷர்கள்.

ஓய் விவேக மானசீகரே! அக்காமக்கிழத்திகளது பொய்மினுக்காகிற தூண்டி லகப்பட்ட மச்சங்கள் பகவற்சுகத்தில் கலப்பது அருமையிலும் அருமையென் றுணரும். "வரைவிலா மங்கையர் மென்றோட் - புரையிலாப் பூரியர்களாழு மன்று" என்றபடிக்கு, அப்பாதகிகளின் தோள்களாகிற ஆழம்பொருந்திய நரகத்தீயிற் கிடந்து அவ்வேசைகளின் சாவகாசத்தைவிடச் சொன்ன சத்துக்களைப்பழித்து நிந்தித்துப்பேசவா? எம்பெருமான் அறிவுகொடுத்தது. பரமசண்டாளனுனபோதிலும் அற்பமான பொருள் கொடுத்தால் அவனையே சர்வஸ்வாமியாய் மதிக்கின்ற நிலைமை யற்ற கணிகைகளின் பாதத் தாடனத்தைப் பணிந்தேற்றி, தனது உயிருடல் பொருள் பூமியாவும் அவர்களுக்கேயொப்பித்து, அவர்களிட்ட வூழியத்திற்கு உடன்பட்டு, அந்த சண்டாளிகளினுல் அடியுதையுண்டு, அவர்களையே சர்வதர்மமாக வெண்ணி, தாய் தந்தை தமயன் குரு தெய்வம் புத்திரன் களத்திரம் பிராதா முதலானவரையெல்லாந் தூஷணிப்பதற்காகவா? தாசிக் கடிமைப்பட்ட இவனைத் தாய்தந்தைகள் பெற்றுவளர்த்தது. அந்தோ! இந்தக் கொடுங் கணிகைகளின் பாட்டையும் ஆட்டையும் கண் காட்டி யசக்கிப் பசப்பலையும் ஆலகால விஷமாக எண்ணுமல், அவர்களுள்ள விடமெல்லாந் தேடித் திரிந்தலைந்து, அவர்கள் தங்களை மதிக்க வேண்டி, அவர் பொருட்டு கொலை களவு காமம் சூது பொய் வஞ்சகம் மதம் அகங்காரம் மாச்சரியம் டம்பம் முதலான தீக்குணங்களுக் கெல்லாம் விளைநிலமாயிருப்பதற்காகவா? இவன் வாசித்து வளர்ந்தது.

ஞானுகந்த கிருபா விசிஷ்டனுன அரிசரண
கமல ரசாமிருத பானரான பாகவதரோ! பரப்
பிரம்ம விசாரணையற்ற ஓர் மனிதன் முக்கிய
மாய் சல்லாப ராக்ஷசிகளான விக்கிரயப் பெண்
களுக்கும் இவர்களோடு சேர்ப்பிக்கும் இழிவா
ளரான சங்கம்வாங்கிகளுக்குமே இரையாகப்
படுகிருன். இவர்களைப்பார்க்கினும் தாழ்வான
ஜாதியினர்களை உண்டென யார்தான் சொல்ல
வல்லவர். அப்படிப்பட்டவர்களைக்கண்டு உயர்
ந்த ஜாதியாரும் அவர்களுக்குக் கீழ்ப்படிதல்
மாயா கலிகால மகத்வமன்றி வேறின்று. இவர்
களுக் குகந்தவரையே தாசிகளென்றும் தருமம
ற்ற வேசிகளென்றும், கூத்திகளென்றும் கொ
டும்பாவப் பாத்திகளென்றும், வரைவிலா மாதர்
களென்றும் நிரையிலாச் சூதர்களென்றும், மதி
யறு தடி தேடிகளென்றும் நெறியுறு குடிகே
டிகளென்றும், பரத்தையர்களென்றும் பழிதே
டுஞ் சிரத்தையர்களென்றும், கணிகைகளென்
றும் காசினரைப் பணி கைகளென்றும், விலைமு
லையுள்ள விலைப்பெண்ணென்றும் அலைவினைமூ
ட்டிய வலைப்பெண்ணென்றும், காமக்கிழத்திக
ளென்றும் கடுவினைக்கான வுழத்திகளென்றும்,
மேனி மினுக்கிக ளென்றும் மேதினிக் குரிய
ஆணிகளென்றும், வியாதிப்பெட்டிகளென்றும்
விசுவாசமில்லாப் பட்டிகளென்றும், பொய்ப்ப
டு குப்பைகளென்றும் புண்ணியரொப்பிடு தப்
பிகளென்றும், லாலனக் காட்டேரிக ளென்றும்
தீதுறு தூத்தேரிகளென்றும், தீயபாலூட்டிக
ளென்றும் பொருளுள பேரையே வாட்டிகளெ
ன்றும், கிண்ணமாற்றுங்கள்ளிகளென்றும் வண்
ணங்காட்டுங் கொள்ளிகளென்றும், சூதுகளாடும்
பாவிகளென்றும் வாதுகள்தேடுங் காதிகளென்
றும், பித்துமருந்திடுபிடாரிகளென்றும் உத்தமி
மார்க்கோர் குடாரிகளென்றும், கற்புளபேர்க்குச்
சத்துருவென்றும் பற்பலபேருக்குப் பித்துரு
வென்றும், இப்படி பலபலநாமங்களுடையவர்க
ளாகவன்றே நிந்திக்கப்படுகிருர்கள்.

தீனதயாளுவான எமது அரும்பெருஞ் சோ
தியென்னும் அப்பனுடைய திருவடிகளுக்கே
யடிமை பூண்டுள்ள உத்தமரோ! "தூமகேது பு
விக்கெனத்தோன்றிய வாமமேகலை மங்கையர்"
என்றும், "துறந்தோருள்ளத்தை வளைத்துப்பிடி
த்துப் பதைக்கப்பதைக்க வதைக்குங் கண்ணூர்"
என்றும், "பொய்யடாபேசும் புவியின்மடமாத
ரைவிட் டுய்யடாவுய்யடாவுய்" என்றும், "நகை
குலிக்கியு முகமினிக்கியு நகைநகைத்திடு மாத
ரை - நம்பொணுதுமெய் நம்பொணுதுமெய் நம்
பொணுதுமெய் காணுமே" என்றும், "நேசத்
தின்கற்பா ணிலைகலங்கி நீர்விடுக்கப் - பாசப்பர
த்தைமுன்றில் பட்டுறங்கும் பாதகன்றன் - நாசக்
கருத்தி னடையடைந்து நாரணன்றன் - வாசத்
தலம்வணங்கா மாபாவம் போல்வளர்ந்து" என்
றும் இப்படி யநேகப்பிரமாணங்களால் தூஷித்
திருப்பதைச் சற்றும் கவனியாமல் வேசியின்
மோகவலையில் அகப்பட்டு கார்த்தப சுவானுதிக
ளுஞ் சகியாத விதமாக ஒருத்தியைப் பலபேர்
கூடி யனுபவிக்கிருர்கள். இவர்களுக் கெத்தா
லிஃபற்றியதோ நாணமென்கிற பொருள், தெரிய
வில்லை. ஓய் ஸ்வாமி யாசாரியரோ! இந்த ஸ்திரீ
தூஷணங்களைப் பொதுவாக எல்லாஸ்திரீகளுக்
கும் சொல்லப்பட்டதோவெனில் அதுகூடாது.
ஏனென்ருல், பெண்களெல்லாம் தூஷித்து நீக்
கப்பட்டவர்களானுல் லோகமாதாவான பெரிய
பிராட்டியார், சரஸ்வதியார், பார்வதியார், சசி
தேவியார், அருந்ததி முதலான தேவரிஷி பத்தி
னிகளையும், ஆண்டாள், பொன்னுச்சியார், பரு
த்திக்கொல்லையார், சாண்டலியார், தேவஹூதி
யார், சபரி, த்ரௌபதி முதலான ஞானுதிக்கை
களையும் நிந்திக்கவரும். ஆதலால் விகிதபோகத்
துக்குரிய நற்குண நற்செய்கையுள்ள கற்புள்ள
தங்கள் பத்தினிகளைத் தூஷணத்திற் கிலக்காக்கி
னுல் ரௌரவாதி நிரயத்துக் காளாக வேண்
டிவரும். ஆகையால், வரையிலாமங்கையரையே
தூஷணிப்பது. இஃதன்றி ஸ்திரீகளுடையதேக
முழுதும் புனிதமென்றும், அமிர்தஸ்தானங்க
ளென்றும், ஸ்மிருதி புராணுதிகளிற் சொல்லி
யிருக்கின்றன. இதைநோக்கி யன்றே திருவள்
ளுவநாயனுர் கற்புள்ளவர்களோடு கூடிய அற
த்தையே மேலென்று வாழ்க்கைத் துணை நலத்
தைச் சொல்லிய அதிகாரத்தில் "பெண்ணிற்
பெருந்தக்க யாவுள கற்பென்னுந் - திண்மை
யுண்டாகப் பெறின்" என்றும், "அறத்தான்
வருவதே யின்பமற்றெல்லாம் - புறத்த புகழு
மல" என்றும், "அறத்தாற்றி னில்வாழ்க்கை
யாற்றிற் புறத்தாற்றிற் - போஒய்ப் பெறுவ தெ
வன்" என்றும், இல்லாளோடு கூடிய தருமத்
திற்கே யாதிக்கமுள்ளதைப்பற்றி "முயல்வாரு
ளெல்லாந்தலை" என்றும், "பாலொடுதேன்கலந்
தற்றே பணிமொழி வாலெயி றூறியநீர்" என்
றித்தியாதிகளாலே சிறப்பித்துக் கூறலாயினுர்.
ஆதலால், பெண்ணைப்பழிப்பது பத்தினிமார்
களைப்பற்றியன்று. இவருடையவரைவின்மகளிர்
அதிகாரத்தானு முணர்க. "மைவிழியார் மனை
யக" லென்ற ஔவையார்தாமே "மெல்லினல்லா
டோள்சேர்" என்று கூறியவாற்ருனு முணர்க.

(வரும்.)

பதிவிரதம்.

உலகத்திலே, பெண்சென்னமெடுத்த ஒவ்வொருவரும் தமது பாலியப்பருவமுதல் விருத்தாப்பியம் வரைக்கும் பதிவிரதத்தை ஆசரிக்கவேண்டியவர்களாயிருக்கின்றார்கள். புருஷனுக்கு எப்படி பிரமசரியம், கிரகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசித்துவம் ஆகிய நான்கு ஆச்சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பெண்களும், பாலியத்தில் மற்றொரு புருஷர்களிடம் சேராமலும், பரிகாசவார்த்தை யாடாமலும், தனக்குவேண்டிய ஞானசம்பாத்தியத்தை தன் தாய் தந்தைகளிடத்தில் கல்வி, கேள்விகளினாலும், வீட்டிற்குரிய தொழில்களினாலும் விருத்தியடைந்து வரவேண்டியதே பிரமசரியமாயும்; மங்கைப் பருவத்தில் தாய் தந்தையரால் தேடிய புருஷனைத் தவிர, அண்டை அயல் வீட்டுப் புருஷரை ஏரெடுத்துப் பாராமல் தன்பதிக் குரிய ஏவற்றொழிற் செய்தும், அதிதி முதலியவர்களை யாராதித்தும், அன்பொடு அன்னதான தருமஞ் செய்தும் வருவதே கிரகஸ்தமாயும்; இல்லற தருமத்தை கணவனுக்கொத்து நடந்து வந்த சிலகாலத்துக்குப் பின், மோக்ஷார்த்தத்துக்காக முயலும் கணவனுடைய சிசுருஷையை சிலாக்கியமாகக் கொண்டு, கணவன்செய்யும் தீர்த்தயாத்திரை, வனங்களிலும், மலைகளிலும், ஊர்களிலும் ஜகதீசன் திருக்கோயில் கொண்டிருக்கும் திவ்விய தேசசேவை முதலியவைகளைச் செய்துவருவதே வானப்பிரஸ்தமாயும்; கணவனுடைய முதுமைப் பருவத்திலேனும், கணவனை யிழந்த பின்னேனும், அக்கணவனையே பதி, தெய்வமென்று தியானித்து காலங்கழிப்பதே சந்நியாசித்துவமாயும் நான்காக விளங்குகின்றன.

இவற்றால் பெண்களுக்குப் பதியைத்தவிர தெய்வம், பந்து, மித்திரன், வேறில்லையென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. பெண்கள் புருஷனிருந்தாலும், பிரிந்தாலும், இறந்தாலும் வேறொரு இச்சையுங் கொள்ளத் தகாது. ஒரு புருஷனை யடைந்தபெண் மறு சென்னத்திலும் அப்புருஷனை யடையவேண்டியதே பதிவிரதையின் பிராப்தி யாகையால், வேறு கணவனை நாடக்கூடாது. அப்படி நாடினால், மிருகமாகப்பிறந்து பலபேர் பரிகசிக்கவும், காரியுமிழவும் ஆடு, மாடு, நாய், கழுதைகளைப்போல் சுற்றித்திரிவார்கள். இப்படி இழிவான சென்மமெடுப்பதைக்காட்டிலும், பிறவியில்லாத மோக்ஷபேரானந்தத்தை யடைவது எவ்வளவு சுகிர்தம் பாருங்கள்! அற்ப ஆசையால் வரும் கஷ்டம் எவ்வளவு பாருங்கள்!

இவைகளையெல்லாம் நீக்கவும், நன்னெறியையூட்டவும், முற்காலத்தி லிருந்தவர்களான சீதை, சந்திரமதி, தமயந்தி, சாவித்திரி, நளாயணி, சயிப்பியை முதலிய அநேக ருஷி ராஜ பத்தினிகள் பதிவிரதா தருமத்தை யநுஷ்டித்துக் காட்டினார்கள். அவர்கள் பதிவிரதாதருமத்தை யடைவதற்காக எவ்வளவோ கஷ்டத்தை யடைந்தார்கள். பதியின் தருமத்தை யடையவேண்டுமானால் சுகதுக்கங்களையும், தைரியத்தையும், பலத்தையும் அடையவேண்டியதாயிருக்கின்றது. அப்படி தர்மத்தை கஷ்டப்பட்டு நாம் காப்பாற்றினால் நம்மை அத்தர்மங்காக்கும்.

ஆனதுபற்றி, சீதாபிராட்டியார் இராவணன் கையில் சிக்கிக்கொண்டபோது, தன்னாயகனை ஸ்ரீராமனைத்தவிர வேறேதியானமின்றி தன்ஜீவனைக் காப்பாற்றிக்கொண்டிருந்தாள். சந்திரமதி தன்புருஷன்பட்ட கடனுக்காக தான் ஒருபிராமணனுக்கு அடிமையாகிக் காப்பாற்றினாள். தமயந்தி சூதினால் நாடுநகரந்தோற்ற தன் புருஷனுடன்காடுதிரிந்து, புருஷனைவிட்டுப்பிரிந்து படாதனபட்டாள். சாவித்திரிதன்புருஷன் உயிர்விட்டபொழுது, எமனைக்கண்டு தன் புருஷனுயிரையும், மாமனா ரிழந்த செல்வங்களையும், தகப்பனார் நூறு புத்திரர்களைப் பெறவும் வாதாடிப் பெற்றாள். நளாயணி குஷ்டரோகியாகிய தன் புருஷ னுடைய தாசியைச்சேரும்பொருட்டு அவளுக்கடிமைசெய்து, அவள் மன திணங்க வைத்தும், தன் புருஷன் உயிர்போகவும், தான் அமங்கலியத்தையடையவும், ஒரு ரிஷியின் சாபத்தை தன்னுடைய பிரதிசாபத்தினாற் போக்கியும் பதியுடன் வாழ்ந்திருந்தாள். சயிப்பியை யென்னும் இராஜபத்தினி தன்புருஷனுக்கு நேர்ந்த விரதபங்கத்தினால், மறுசன்மங்களில் நாயாகவும், நரியாகவும், செந்நாயாகவும், கழுகாகவும், காகமாகவும், கொக்காகவும், மயிலாகவும் பிறந்து துன்பமடைந்த காலத்தில், தான் காசிராஜனுக்கு மகளாகப்பிறந்து, அப்போதைக்கப்போது திவ்வியஞானத்தை யூட்டி, ஜநகராஜனுக்கு மகனாகப்பிறக்கச்செய்து, தான் அந்தக்கணவனையே சுயம்வரகாலத்தில் புருஷனாக அடைந்து இருவரும் புண்ணிய லோகத்தை யடைந்தார்கள். இப்படியாக அநேகபதிவிரதைகள் கஷ்டமடைந்தது கணக்கில்லை. இக்காலத்தில் ஒவ்வொருபெண்களும் எவ்வளவு கஷ்டம் நேர்ந்தபோதிலும் பதியையே நன்குமதித்து இன்புற்று வாழ்வார்களாக.—(வரும்.)

ஓர் கிருபணன் மனையாள்.

கங்காதரபுரத்தில் தனபாலனென்னும் வணிகன் சாரதை என்னும் பெண்ணணங்கை மணம்புரிந்தான். தனபாலன் பொருளையே பெரிதென்று பாராட்டிவந்தானாகையால் அவன் ஒரு நாளிலாயினும் வயிறு நிறைய உண்டதில்லை. கற்புடைமடை நல்லாளாகிய அவன் மனையாள் தன் நாயகனது குணத்தை நன்றாயறிந்து கொண்டு அவன் மனங்கோணாமல் நடந்துவந்தாள். தனபாலன் தனக்கேற்ற காதல்மனைவி வாய்த்ததைக்கண்டு அவளிடத்து மிக்க அன்புற்றிருந்தானென்றாலும், சிறுவனாக விருந்தது முதற்கொண்டே அவன் சிற்றுண்டியை ஒருவருங் காணாதபடி தனியேயிருந் துண்ணுவது அவனதுவழக்கம். அவன் கண்ணுக்கினியன். அதிர்ஷ்டவசத்தால் அவனுக்கு வர்த்தகம்கைகூடிவந்து பெருந்தனமுடையவனானான். அவனுக்குதனஞ் சேரச்சேர அதனிடத்தில் அதிகஆசையுண்டாகி கிருபண சிரோமணியானான். கலியாணத்தின்போது வாங்கின கூறையைத் தவிர்த்து மற்ற உடுபுடவைகளிரண்டும் சீட்டிப்புடவைகள்தான். சாரதை தன்பந்துக்களில் யாரையேனும் பார்த்துவிட்டு வரும்படி போகவேண்டுமானால் வெகு நாளைக்குமுன்னே வாங்கப்பட்ட அந்தக் கூறையைத் தவிர்த்து அவளுக்கு நல்ல ஆடை வேறில்லை. தனபாலனுக்கு மிக்கபொருளிருந்ததனால் அவனுக்குத் தன் மனையாளுக்கு வேண்டும் ஆடை ஆபரணங்களை யெல்லாம் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்கிற ஆசைமட்டும் இருந்ததேயொழிய தன்கையிலிருந்து ஒரு காசளவாவது எடுக்க மனம்வரவில்லை. சாரதை ஏழைவீட்டுப் பெண்ணாதல் பற்றி உயர்ந்த ஆடை இல்லாததைப் பாராட்டாமலே நல்லகாலம் பிறக்குமென்று காலத்தைப்போக்கி வந்தாள்.

இவ்வாறே நெடுங்கால மிருந்தாளென்றாலும், அவள் புடவை சல்லடைக்கண்ணாய் உடுத்தக் கூடாத கந்தைகளாகிவிட்டதை கண்டுபொறுக்கமாட்டாமல் ஒருநாள் தன்கணவன் சந்தோஷமாயிருக்கும் வேளையில், சுவாமி! நான் இவ்வாறு கந்தையை யுடுத்துவது உமது பெருமைக்கழகோ? உம்மிலும் ஆயிரமடங்கு தாழ்வானவர்கள் தங்கள் மனைவிமார்களுக்கு வேண்டும் ஆடையாபரணங்களையெல்லாம் அவர்கள் இஷ்டப்படி வாங்கியிருப்பதை நீர் அறியீரோ? நான் நமது பந்துக்கள் வீட்டிற்குப் போகும்போதாயினும் நல்லாடையை யணிந்து கொண்டு போக வேண்டாமோ? கலியாணத்தின் போது தாங்கள் வாங்கிக்கொடுத்த கூறையைத் தவிர்த்து இரண்டாவது நல்ல புடவையை இன்றளவும் வாங்கிக்கொடுத்த துண்டோவென்று சொல்லி விசனப்பட்டாள். அதற்கு தனபாலன், பெண்ணே! நான் சொல்லுவதைக்கேள்; எங்கள் வீட்டில் எனது அத்தை உன்னைப்போலவே தான் ஒரு கூறையைமட்டும் வைத்துக்கொண்டு நெடுங்காலம் போக்கினாள்; நல்லநாள்களில் உடுத்துவதற்கு ஒன்று போதாதா! பணத்தை வீணே புடவைவாங்கிப் பாழாக்குவதிலென்ன பயன்? கையில் பணமிருக்கும்போது கண்டபடி யெல்லாம் பாழுக்கிறைத்து விட்டுப் பின்பு சோற்றுக்கும் வழியில்லாமல் அன்றாடங் கூலிவேலைசெய்வதோ அழகு? இப்பொழுது பணமகப்படுவது சற்றே வருத்தமாயிருக்கிறது? ஸங்கராந்திபண்டிகை யன்று உன் இஷ்டப்படி நல்லபுடவை வாங்கிக்கொடுக்கிறேனென்றான். அதிக லோபத்தினால் அவன் வீட்டிற்குவேண்டிய பண்டங்களையும் வாங்க மனமில்லாதவனாகி அதிக செட்டா யிருந்ததனால் இருவரும் வயிறார உண்பதற்கும் வாய்க்கவில்லை. இவ்வாறிருந்ததைக்கண்டு சாரதை மனம்புழுங்கி அவன் கிட்டச்சென்று, சுவாமி! என் பஞ்சைக்கோலத்தைக்கண்டு எல்லோரும் நிந்திக்கிறார்கள்; நான் இப்படி யிருப்பது உமது பெருமைக் கழகாமோ? ஆயினும் இது விஷயத்தைப் பற்றி இனியேனும் பன்னிப்பன்னி யுரைப்பதில் பயனில்லை; உமது இஷ்டப்படி செய்யலாம்; இன்றுகாலையில் நான் எனது சகோதரியைப் பார்த்துவிட்டு மத்தியானத்திற்குமேல் இங்கே வரும்படி எனக்குத் தாங்கள் விடைதர வேண்டுமென்று கண்ணீர்விட்டழுது சொல்லி அவன் அநுமதிப்படியே அவள் அங்கே சென்றாள்.

தனபாலன் தன் கடைக்குச்சென்று பகலெல்லாம் விரல்கள் நோவப் பணத்தை யெண்ணி வைத்துவிட்டு அவளை நினைவா யிருந்தான்; அவளுக்குப் புடவை வாங்கிக்கொடாம லிருந்ததைப்பற்றி அவனுக்கே வெட்கமாயிற்று; எப்படியிருந்தாலும் அவளுக்கு நல்ல சேலையை அன்றே வாங்கிக்கொண்டு போகவேண்டுமென்று தீர்மானித்தான். அவன் நெஞ்சார அவளைவிட அவனுக்கு வேண்டியவர் யாரு மில்லை. அன்று அந்திப்பொழுதுக்கு முன்னேயே வீட்டுக்குப் புறப்பட்டுப் போனான். அவன்போகும்போது தந்தி தபால் கம்பம்விழுந்து உருத் தெரியாதபடி நசுங்கிப்போன ஒருத்தியைப் புடவையால்மூடி நாலுபேர் தூக்கிக்கொண்டு போவதையும், அவள் பின்னோடு சிறுவர்கள் கூச்ச

விட்டுச் செல்லுவதையும் பார்க்கையில், அந்தப்புடவை தன்மனையாளுடையதென்று காணவே அவன்மனம் பதைத்துருகி, அப்பா! இதென்ன கொடுமை! சற்றே நில்லுங்கள்; நான் பார்க்கவேண்டுமென்றான். கம்பம் விழுந்து நசுங்கியிருந்ததினால் உருத்தெரியவில்லை; அவள் மேலே மூடியிருந்த சேலை சாரதையின் சேலையென்று கண்டு அவள்தான் இறந்தாளென்று நிச்சயித்தான். மீண்டும் அவன் அவள் காலிலிருந்த கிழிந்த பாதரக்ஷையைக் கண்டதன்பின் அவள் தன் மனைவியேயென்று நிச்சயித்துத் தேம்பித்தேம்பி அழுதான். அவளைக்கொண்டு போகும்போதே அவள் தனபாலனென்னும் பரமலோபியின் மனையாளென்றும், கம்பம் விழுந்து அவ்வாறு நசுங்கி மாண்டுபோனாளென்றுஞ்சொன்னார்கள். அவளை அவர்கள் அவன் வீட்டுக்குக் கொண்டுபோகையில் அவனுடைய இருபணத்துவத்திற்காக அவனை வைதார் பலர். தனபாலன் அவளைத் தன்மனைவியென்றுகட்டிக்கொண்டு புலம்பி யழுதுவிட்டு, அவள் செத்த பின்னாயினும் அவள் மனோரதத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அழுதுகொண்டு தன் கந்தைத் துணியோடு ஜவளிக்கடைக்கு ஓடி முதற்றரமான விலைபெற்ற சித்திரப்பூம் பட்டாடையொன்று வேண்டுமென்று கேட்டான். அங்குள்ளார் அதைக்கேட்டு அவனை யாரோ பிச்சைக்காரன் கடைப்பிச்சைக்காக வந்திருக்கிறானென்றுநினைத்துப்பரிகாசம்பண்ணினார்கள். அவர்கள் சொன்ன விலையை அவன்கையின்மேற்கொடுக்க அவர்கள்அவனைதனபாலனென்றறிந்து அத்தனை விலைபெற்ற ஆடையை அந்தப்பரமலோபி வாங்கினதைக்கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அவனோ தன் வீட்டிற்குச் சென்று அந்தப்பட்டாடையை அந்தப் பிணத்தின்மேல் விரித்து, சாரதே! நான் கூப்பிடுவது உன்காதிலேபடவில்லையோ? நான் உனது காதற்கொழுநனன்றோ? நான்பரம லுப்தனாதலால் இத்தனை காலமாகப் புடவை வாங்காதிருந்தேன்; விலைபெற்ற இந்த ஆடையைப் பார்த்தாயோ? இப்பொழுதாயினும் இந்த ஆடையை நானே உனக்கு உடுத்துகிறேன்; இதைப்பெற்றுக்கொள்ளென்றுஅதை அப்பொழுதுதான் அவள் மேலே விரித்துப் போர்த்தப்போனான். அவ்வேளையில் சாரதை வீட்டுக்குவந்து தன்கணவன் நிற்கின்ற நிலையைக்கண்டு, சுவாமி! இதென்ன விசித்திரமென்று அவனண்டை யோடிவந்தாள். தனபாலன் அவளைக்கண்டு அஞ்சி இது கனவோ நினைவோவென்று ஐயுற்றான். சாரதை அவனை நோக்கி, பிராணநாதா! உம்மைப் பாவிநான் இவ்வாறு துன்பப்படும்படி செய்தேனே; நான் உடுத்திருந்த ஆடை ஆயிரங்கந்தலாயிருந்ததாதலால் வெறுப்புற்று அதையும், பழய பாதரக்ஷையையும் ஓர் ஏழைக்குக் கொடுத்துவிட்டு இந்தச் சீட்டிப்புடவையை என் சகோதரியிடமிருந்து வாங்கி யுடுத்தினேன். அந்தப்பேதை இவ்வாறு வழியில் கம்பத்தின்கீழே அகப்பட்டு நசுங்கி இறந்திருக்கவேண்டும். இந்தஆடையின் அடையாளத்தினாலே தான் நானும் இவ்வாறு சங்கிக்கிறேன். இவள் அப்பொழுதே நடக்கமாட்டாமல் தளர்ந்திருந்தாள். நான் இறந்துபோனேனென்றும், உம்மைப்போலக் கிருபணர் இல்லையென்றும் ஊரெல்லாஞ் சொல்லிக் கொண்டது என்காதிலும் விழுந்து துக்கப்பட்டேன். உமக்கு என்மீதுள்ள அன்பின் மிகுதியை இன்றுதான் கண்டேனென்றாள். அதற்கு அவன் என் கண்ணே! உன்னிலும் நல்லார் இப்புவியில் எனக்கொருவருமில்லையென்று துணி. இன்றோடு எனது உலோபகுணம் நீங்கிவிட்டது; இனிமேல் நீ சொன்னபடி செய்வேனென்றான்.

உபயோகமான சிறுமுறைகள்.

கண்ணாடிபுட்டி முதலியவைகளை நன்றாய்ச் சுத்திசெய்ய :— வேண்டுமானால் கரிப்பொடியினால் வெந்நீரில் சுத்திசெய்து கடைசியில் குளிர்ந்த ஜலம்விட்டுக் கழுவவேண்டும்.

அறைகளுக்கு நல்லவாசனை யூட்ட :—காபிக்கொட்டைப் பொடியைக் கொஞ்சம் எடுத்து நன்றாய் நெருப்பிற்காய்ந்த ஒரு இருப்புப்பாளவின்மேல் தூவ அதிலெழும்பும் புகை அறையிலுள்ள துர்க்கந்தத்தையும், கெட்டவாயுவையும் போக்கி ரம்மியமான நல்ல வாசனையை யுண்டாக்கும்.

மூட்டுப்பூச்சி கிட்ட அணுகாதிருக்கச்செய்ய : படிக்காரத்தைப் பொடியாக்கி ஜலத்திற் கரைத்து அதில் நனைத்துப் பிழிந்து உலர்த்தின துணி, சொக்காய் முதலியவைகளைத் தரித்துக் கொள்ள, மூட்டுப்பூச்சி கிட்ட வருகிற தில்லை. ரயில்மார்க்கமாய் பிரயாணஞ் செய்கிறவர்களுக்கு இதனால் மிகுந்த நன்மையுண்டு. அன்றியும், படிக்கார ஜலத்தில் பிழிந்துலர்த்திய துணிகளில் நெருப்புப்பிடிக்கிறதில்லை. ஆகையால் சிறுகுழந்தைகளுக்கு உடுத்தும் வஸ்திரங்களை இவ்வாறு செய்வதினால் தீயினால் சிறுகுழந்தைகளுக்கு நேரும் அபாயங்கள் அரிதாகும். ஆனால் இவ்வளவு சிரத்தையோடு செய்வதரிது.

(ஜநாநந்திநி.)

திருக்குறள் தாற்பரியம்.

(சஎ-ம் பக்கத் தொடர்.)

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீரொழுக்க
நெறிநின்ருர் நீடுவாழ்வார்.

பொருள்.

பொறிவாயில்=ஐம்பொறிகளை வழிகளாக
வுடைய
ஐந்து=ஐந்தாசைகளையும்
அவித்தான்=அறுத்தவனது
பொய்தீர்=பொய் நீங்கிய (மெய்யான)
ஒழுக்கநெறி=ஒழுக்கவழியிலே
நின்ருர்=நின்றவர்
நீடுவாழ்வார்=என்றும் வாழ்வார்.

தாற்பரியம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐம்பொறிகளினுலே, பிரகிருதிவசத்தால் வரும் பரிசம், சுவை, ஒளி, வாசனை, ஓசை என்கிற ஐவித ஆசைப் பெருக்கை யறுத்து, ஞானங் தருவதாகிய வேதமார்க்கத்தைக் கொடுத்த மெய்யான கடவுளின் நன்னெறியில் நின்றவர்கள் அழிவிலாததும், மறுபிறவிக் கேதுவில்லாததுமான மோட்சானந்தத்தைப் பெறுவார்களென்பதாம்.

ஔவையார் நீதிவாக்கியம்.

(சஎ-ம் பக்கத் தொடர்.)

சூது விரும்பேல்.

சூது=சூதாடுவதை
விரும்பேல்=நீ விரும்பாதை.

கருத்து.—பலர் பொருளைக் கொள்ளைகொள்ளுவதற் கேதுவாகிய சூதாட்டத்தை விரும்பியாடாதை யென்பதாம்.

குறளுதாரணம்.

வேண்டற்க வென்றிடினுஞ் சூதினைவென்ற
தூஉந், தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

பொருள்.

வென்றிடினும்=வெல்லுந்திறமை யிருப்பினும்
சூதினை=சூதாடுதலை
வேண்டற்க=விரும்பாதிருக்க வேண்டும்
வென்றதூஉம்=(ஓர்கால்)வென்றபொருளும்
தூண்டிற்பொன்=தூண்டிலுள்ள இரும்பை
மீன்விழுங்கியற்று=மீன்விழுங்கியதுபோலாம்.

கருத்து.—ஒருவன் சூதாட்டத்தில் வல்லனுயிருந்தாலும், வெல்லுதல் நிச்சயமில்லாமையால், பலவிதத்திலுங் கெடுக்கும் அச்சூதை விரும்பாதிருக்கக்கடவன். விரும்பின், சூதில்வென்ற பொருளும், தன்பொருளும், தூண்டிலிடும் இரையையும் இரும்பையும் மீன்விழுங்கியதுபோலாகு மென்பதாம்.

கட்டுக்கதைகள்.

நாயும், ஆடும்.

ஓர் நாயானது ஓர் ஆட்டுக்குச் சில படி கோதுமையைக் கடனாகக்கொடுத்ததாக வியாச்சியங் கொண்டுவந்தது. அக்கடனை இந்த வாதி, கோநாய், பருந்து, கழுகு இம்மூன்று வுண்மையான சாட்சிகளினுல் ருசுவு படுத்திவைத்தது. அதனுல், பிரதிவாதிக்குக் கோர்ட்டுச்செலவும் நஷ்டமுங் கொடுக்கும்படி நேரிட்டு, தன்மூதுகின் மயிரை விற்பனைசெய்து கடன்காரனுக்குத் திர்ப்திசெய்யும்படி யுடன்பட்டது.

நீதி.

ஒரு வியாச்சியம் பொய்சாட்சிகளாற் பலப்பட்டிருக்கும்போது நியாயங்கிடைப்ப தரிதாயிருக்கின்றது. நீதிமான்கள் ஒரு தீர்ப்பைச்செய்யும்போது குற்றமின்மை எப்போதும் உபயோகமற்றதா யிருக்கின்றது.

நாட்டுப்புரத்தானும், பாம்பும்.

ஒரு பாம்பு ஒரு குடிசையின் வாயிற்படியின் கீழ் பதுங்கிக்கொண்டிருக்கையில், ஒரு குழந்தை அதைமெரிக்க, அக்குரோதத்தினுல் அப்பாம்பு கடித்துக் குழந்தை யிறந்துபோனபடியால், தகப்பனுக்கு மிகவும் விசனமுண்டாய், அவன் அப்பாம்பின் தலையின் பேரில் அஞ்சாமலடித்தான். ஆனுல் அவனுடைய குறி தப்பிப் போய்த் தானடித்த கல்லின்பேரில் அடையாளமாத்திர முண்டாயிற்று. இதற்குப்பின்பு சில நாள் பொறுத்து, அந்நாட்டுப்புரத்தான் சமாதானஞ்செய்ய எத்தனிக்க, பாம்பானது கூடாதுகூடாது, நான்கல்லிற்குறியையும், நீஉன்குழந்தையின் மரணத்தையும் நினைக்கிற பரியந்தம், நாம் அன்னியோன்னிய இஷ்டத்தைக் கொண்டிருக்கமாட்டோ மென்றது.

நீதி.

பகையாளிகளோடு எப்படி சமாதானஞ்செய்கிறதென்று நாம் எச்சரிக்கையோ டிருக்கவேண்டும்.